# தென்மொழி

சுவடி: 14.
ஓலை: 10.
விலை: உரு 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

## எந்த அளவுகோல் கொண்டே அளப்பது ?

எல்லாரும் மக்களுக் குழைக்கிறோம் என்கிறார்!
எல்லாரும் உண்மையர் யாமே என்கிறார்!
எல்லாரும் பிறரையே ஏய்ப்பவர் என்கிறார்!
எல்லாரும் தம்தொண்டே மெய்த்தொண்டு என்கிறார்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

அனைவரும் தம்மையே அறிஞர் என்கிறார்!
அனைவரும் தம்மையே ஆய்வாளர் என்கிறார்!
அனைவரும் தம்மையே நேர்மையர் என்கிறார்!
அனைவரும் தம்மையே அழுக்கிலார் என்கிறார்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

தம்கட்சி ஒன்றையே தங்கம்என் றுரைப்பார்!
தம்கொள்கை ஒன்றையே தகுந்ததென் றளப்பார்!
தங்களை மட்டுமே தவமுனி என்பார்!
இங்குளார் யாவரும் இழிந்தவர் என்பார்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

மொட்டையும் தன்னையே முழுமரம் என்றிடும்!
குட்டையும் தன்னையே குரைகடல் என்றிடும்!
மட்டையும் தன்னையே 'மதிமிகு' வென்றிடும்!
பட்டையும் பழித்துப் பஞ்சுலா வந்திடும்!
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

திருட்டில் வலுத்தவன் திருட்டை ஆய்கிறான்;
குருட்டுக் கண்ணனே குருடா என்கிறான்;
புரட்டனே பிறரைப் புளுகர் என்கிறான்;
அரட்டை அடிப்பவன் அறிஞனாய்த் திரிகிறான்;
எந்த அளவுகோல் கொண்டே அளப்பது?
எவரதை அளந்தே எவருக் குரைப்பது?

# நமக்கு வந்த மடல்கள்.

**0:566:** ஐயா, ஈழத்தமிழர்தம் இன்னலைத்தங்கள் ஆசிரிய வுரையில் கண்டு என் கண்கள் குளமாயின; உள்ளம் துடித்தது; என் எண்ணம் இருபது கற்களைத்தாண்டி கண் காணா இடத்திற்கும் தாவிச் சென்று அலைமோத உணர்வுவயப்பட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டேன். தங்கள் உரையைப் படித்தபின் உறுதியாக அக் கொடுமைகள் ஓர் இன அழிப்பு முயற்சிக்குக் கால்கொள்வதாக அமைந்திருப்பது வெள்ளிடைமலையென விளங்குகின்றது. இம் மாபெரும் கொடுஞ்செயலுக்கு நாலரை கோடித் தமிழர் தம் முடிவு என்னவோ? இக்கால் விழுந்துபட்டிருக்கின்ற தமிழர் தம் உணர்வைத் தட்டி எழுப்பி, அதைச் செயலாக்கும் முயற்சியில் தென்மொழி போன்ற அரசியல் அற்ற ஏடுகளால்தான் இயலும். ஆம்! தங்கள் ஆசிரியவுரையில் குறிப்பிட்டதைப்போல உலகத்தமிழர் ஒருங்கு கூடி ஒரு தன்னாட்சியை அமைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. இதற்குச் சான்றாக இங்குள்ள தமிழ்த் தலைவர்களை விடுதலை செய்யக் கோரி இலண்டன் மாநகர் வாழ் தமிழர் ஆண்டு நிகழ்த்தியிருக்கும் அறப்போராட்டத்தையே கூறலாம், ஐயா! இனித்தங்கள் ஆசிரிய வுரை வில்லிலிருந்து விரைந்தெழும் கணைபோல விளங்கி விரைய வேண்டும் என்று விரும்புகின்றோம்.

—புலவர். தமிழடியான். க.மு, ஆரணி, (வ. ஆ)

**0.567:** அன்புடைய ஐயா, வணக்கம். இலங்கை யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பல தமிழர்களைப் படுகொலை செய்த ஒரு கிழமைக்குள் எங்கோ செல்லும் வழியில் சென்னை வானூர்தி நிலையத்தில் வந்திறங்கிய அன்றைய இலங்கைத் தலைமையமைச்சர் திருவாட்டி. பண்டாவுக்கு மாலையிட்டு வாழ்த்துக் கூறியவரை (முகத்தில் என்ன அகலமானசிரிப்பு!-'இந்து' கூட வயிற்றெரிச்சலுடன் புகைப்படமெடுத்து முகப்பில் வெளியிட் டிருந்தது) ''இங்குள்ள நாலரைக் கோடித் தமிழினத்தின் முன்னேற்றத் திற்காகவும் கட்டியங்கூறி நிற்கும் ஒரே ஒரு தலைவன்'' (ஆசிரியவுரை 'தென்மொழி' சுவடி 14, ஓலை 7) என்று குறிப்பிட்டிருக்கும் தங்கள் மயக்கத்தை நீங்கள் அசையா நம்பிக்கை வைத்திருக்கும் இறைவன் தான் தெளியவைக்க வேண்டும். தன் நலனுக்குக் கேடுவரும் போதெல்லாம் தமிழ், தமிழ்நாடு, தமிழினம்பற்றிய பற்று காட்டாற்று வெள்ளம்போல் பீறிட்டு உணர்ச்சி நிறைந்து வெளிக்கிளம்பும். பிற வேளைகளில் திருவாரூரில் தேர் ஓட்டுவதும், சுப்புலட்சுமியிடம் (தமிழிசைக் கழகத்தில்) தம் சொல் வன்மை காட்டுவதிலும், பெயர் பொறிப்பதிலும் நேரம் செல்லும். பாவாணரின் செ. சொ, பி. பேரகரமுதலிக்கு அரசு உதவ மறுத்துத் தாங்கள் தமிழன்பர்களிட மிருந்து பணம் தண்டியதையுமா மறந்து விட்டீர்கள்? நரியைச் சிக்க வைத்தாற்போல் செ சொ. பி. அகரமுதலித் திட்டத்தை அரசு ஏற்க வைத்தாலும் ஓரிலக்க உருபாவுக்குமேல் மூன்றாண்டுகளில் பெறமுடிய வில்லையே. நெருக்கடி காலத்தில் ஓரிலக்க உருபாய்களுக்கு இசை வளித்தவர்களைக் கையெடுத்துக் கும்பிடத் தோன்றுகிறது.

இது தமிழ் மொழிப்பணி, இனப்பணி பற்றிக்கூறினால் கொதிப்பு தான் மிஞ்சும். தாங்கள் விரும்பினால் அவற்றையும் பின்னால் விரிவாகக் கூறுகிறேன். இவ்வகைத் ''தலைவர்களை'' நம்பினால், பின்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

# தமிழே எனக்கு இறைவன்!

தமிழே எனக்கிங் குயிர்மலர்ச்சி—செந்
தமிழே எனக்கிங் குடலம்!
தமிழே எனக்கிங் குள்ளுணர்வு—பைந்
தமிழே எனக்கிங் குலகம்!

தமிழே எனக்குக் கருத்தெழுச்சி!—தீந்
தமிழே எனக்குப் பார்வை!
தமிழே எனக்குச் செவியோசை!—நற்
றமிழே எனக்குப் பிறவி!

தமிழே எனக்கு முழுமுதல் தாய்!—முத்
தமிழே எனக்குத் தந்தை!
தமிழே எனக்குக் குரு,கல்வி!—நந்
தமிழே எனக்குக் காட்சி!

தமிழே எனக்கிங் குயிர்த்துணைவி!—இன்
தமிழே எனக்குக் குடும்பம!
தமிழே எனக்கிங் குயிரின்பம்!—வண்
தமிழே எனக்குக் குழவி!

தமிழே எனக்கிங் குறவுரிமை!—வன்
தமிழே எனக்குச் சுற்றம்!
தமிழே எனக்கிங் குயர்வாழ்க்கை!—அந்
தமிழே எனக்குத் தொண்டு!

தமிழே எனக்கோர் எழுத்துறவு!—இயற்
றமிழே எனக்குப் பேச்சு!
தமிழே எனக்கோர் அறிவியக்கம்!—இசைத்
தமிழே எனக்குயிர் மூச்சு!

தமிழே எனக்கிங் குயிர்நட்பு!—நடத்
தமிழே எனக்கு விருந்து!
தமிழே எனக்கு விளையாடல்—உயிர்த்
தமிழே எனக்கு நனவு!

தமிழே எனக்குத் திருமறைநூல்—பழந்
தமிழே எனக்குக் கனவு!
தமிழே எனக்கு மத மெய்மம்!—அருந்
தமிழே எனக்கிங் கிறைவன்!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




**சுவடி : 14 ஓலை : 10.**

[நிறுவனம் தி.பி. 1990 (1959)]

# தென்மொழி

இலக்கிய இதழ்

குப்பம் தி. பி. ௨00௯-சன-பெப்-1978.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்.
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]


# வேத-மத-இந்தியா!



கடந்த நெருக்கடி நிலையின் அதிகாரக் கடுபிடிகளைப் பயன்படுத்தி இந்தியாவில் உள்ள அனைத்துப் பார்ப்பன அதிகாரிகளும் தங்கள் இனத்திற்கு எத்துணையளவு வலிமை தேடிக்கொள்ள முடியுமோ, அத்துணையளவு தேடிக் கொண்டது, எல்லாருக்கும் வெளிப்படையாகத் தெரிந்துவிடாத கமுக்கமான ஒரு செய்தி, தமிழகத்தைப் பொறுத்த அளவில் அன்றைய ஆளுநர் சுகாதியாவும், அவர் செயலர்களாயிருந்த தாவே. சுப்பிரமணியன்களும், கோட்டையிலிருந்து கொண்டு எத்தனையெத்தனையோ உள்முகத் தமிழ்—தமிழின அரிப்பு வேலைகளைச் செய்து கொண்டிருந்திருக்கின்றனர்! அவர்களின் சார்பு, சலுகை முதலியவற்றைப் பயன்படுத்தி, அன்று எழுந்த, காஞ்சி காமகோடியாரின் 'பெரியார் பாணி' சுற்றுச் செலவு இன்றுவரை ஓயவில்லை. இன்றிருக்கும் நிலைகளோ காமகோடியாரின் கால்களுக்கும், வாய்க்கும் இன்னும் வலிவூட்டுவன; தென்பூட்டுவன. ஏனெனில் அவரினத்திற்கு என்றென்றும் 'தாசர்'களாக இருந்து, கால் செருப்பாகத் தேய்வதற்கு 'முத்தை'யாக்களும். 'மகாலிங்க'ங்களும், பக்த

வத்சல, சுப்பிரமணியங்களும், 'கண்ணதாசன்'களும் 'சிவஞான'ங்களும் ஏராளமாக இங்குள்ளனர்! இந்நிலையில், இந்தியாவை ஆளுவது இந்திராவாக இருந்தால்தான் என்ன; தேசாயாக மாறினால்தான் என்ன? தமிழினத்தைப் பொறுத்தவரை பேராயக் கட்சியும் சனதாவும் பார்ப்பனியத்தின் இருதலைப்பறவை என்பதே நம் கருத்து. எனவேதான் அரசியல், பொருளியலில் வடவர் ஆளுமையும், அறிவியல், பண்பாட்டியலில் பிராமணீயமும் தமிழகத்தில் வேரூன்றுவதற்கான அடிப்படை முயற்சிகள் அனைத்தும் மிகவும் துணிவாகவும், வெளிப்படையாகவும் செய்யப்பெற்று வருகின்றன; வருவதற்கு வாய்ப்புகள் கொடுக்கப் பெறுகின்றன. ஆகவே, தமிழர்கள் இக்கால் இவ்வகையில், மிகமிக விழிப்பர்க இருக்கவேண்டிய கட்டாயத்திற்கும், தற்காப்பு முயற்சிக்கும் கொண்டுவரப் பெற்றிருக்கின்றனர். இது வெறும் மேலோட்டமான உணர்வுநிலைக் கருத்தன்று; இன்றைய நாட்டு அரசியல் நிலையின் குமுகாயப் பல்நோக்கு உண்மையாகும்!

பொதுவாகவே, இந்தியா என்றாலே அஃது ஆரியர்கள் தேசம்; இந்துக்கள் என்றாலே அவர்கள் 'பிராமணர்கள்' அல்லது அவர்களின் தலைமையை ஒப்புக்கொண்ட அடிமைகள்; இந்தியப் பண்பாடு, நாகரிகம் என்றாலே அவை பூணூல் போடுவதும் குடுமி வைப்பதும், பஞ்சகச்சம் கட்டிக் கொள்வதுந்தாம்—என்று, அமெரிக்க, பிரிட்டிசு கலைக்களஞ்சியங்கள், உருசியா, சீனா போலும் பொதுவுடைமைக் கொள்கை வாழும் நாடுகளில் வெளிவரும் நூல்கள் இவற்றில் எல்லாம் விளக்கம் வரும்படி, இங்கிருக்கின்ற பிராமண வரலாற்றுப் பேராசிரியர்கள் நூல்கள் எழுதி, அச்சீட்டு, அவற்றை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகவும் பரவலாகவும் சிறப்புறப் பரப்பி வருகின்றனர். இத்தகைய பேராசிரியர்கள் வரலாறு என்னும் பெயரில் எதை எழுதினாலும், அதை அச்சிட்டு வெளியிடுவதற்கென்றே தில்லியிலும் பம்பாயிலும் ஆரியப் பார்ப்பனச் சார்பான பணமுதலை வெளியீட்டகங்கள் பல உள்ளன. (உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், இவர்களால் எழுதப்பெறும் வரலாறு என்பது, இக்கால் ஆட்சித் தலைமையில் உள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இவர்கள் தங்களுக்கும் தங்கள் இனத்திற்கும், சார்பாகவும், நன்மை பயக்கும்படியாகவும், பெருமை ஏற்படும்படியாகவும் உண்மை நிகழ்ச்சிகளைத் திரித்தும், தவிர்த்தும், பொய் நிகழ்வுகளைக் கூட்டியும், சேர்த்தும் எழுதிக்கொள்ளும் கற்பனைக் கதையாகும்.)

இவ்வரலாற்று நூல்களுக்கொப்பாக, வடஇந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் வலிவான செய்தித்தாள்களும், அரசு விளம்பரத் துறைகளின் கீழ்ச் செயல்படும் வானொலி, தொலைக் காட்சிக் கருவி

களும் இவர்களின் ஆளுமையில் உள்ளதால் இவர்கள் தம் வேத புராணப் பொய்யுரைகளையும் புளுகுரைகளையும் மிக எளிதாகவும் விரைவாகவும் பரப்ப முடிகிறது. அத்துடன், இங்குள்ள காமகோடி களும், வரதாச்சாரிகளும், நாராயண ராமானுசர்களும், ராம தேசிகன்களும்—தங்கள் விருப்பம்போல் கருத்தறிவிக்க முடிகிறது; கதைக்க முடிகிறது; காலப் பொழிவுகள் நடத்த முடிகிறது! இவர்கள் அனைவரும் ஒருமுகமாகவும் ஒரே மூச்சாகவும் அண்மைக் காலங்களில் கூறிவரும் கருத்துகள் ஒன்றுமறியாத ஏழை எளிய மக்களை ஏமாறச் செய்வன; அவர்களிடையில் கொஞ்சமிருக்கும் அறிவுணர்வு களையும் இழந்து போகச் செய்வன. இவர்களைத் தட்டிக் கேட்பதற் குரிய அரசியல் அதிகாரங்களோ, சட்ட அமைப்புகளோ நம்மவர்க்கு இடந்தருவனவாயில்லை. ஏனெனில், இவர்கள் தங்கள் இனநலன் களைப் பரப்பும் வகைகளுக்குத்துணையாகவே இங்குள்ள இந்துமதம் என்னும் வேத மதமும், இந்திய அரசியலமைப்பும் இருக்கின்றன. இவ்வேத மதத்திற்கெதிர்ப்பாக இங்குள்ள தமிழர் மதங்களாக உள்ள சிவனிய மதமும் மாலிய மதமும் இணைந்து செயல்படுவதில்லை. ஏனெனில் இவ்விரு பெரிய மதங்களையும், இவற்றைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சிறு தெய்வக் கோட்பாடுகளையும் ஏற்கனவே வேதமதமாகிய இந்துமதம் செரித்துத் தன்னுள் அடக்கி ஆட்கொண்டு விட்டது. தமிழில் ஏற்படுத்தப்பெற்ற சமசுக்கிருத மொழிக் கலப்பைப் போல், இம்மதங்களின் உள்ளேயும் புகுந்து இரண்டறக் கலந்துபோன ஆரியக் கொள்கைக் கலப்பை இவை தவிர்த்துக் கொள்வனவா யில்லை.

மேலும், இவ்விந்திய அரசும், ஏதோ எல்லா மதங்களுக்கும் சலுகைகள் காட்டுவதைப்போல, உள்முகமான கொள்கைப் பூசல் களையும் மூட நம்பிக்கைகளையுமே வளர்த்து வருகிறது. அதேபோல் வெளிப்படையாக இங்குள்ள சாதிப்பூசல்கள் ஒழிக்கப் படவேண்டும் என்று போலித்தனமாகக் கூறி வந்தாலும், உள்முகமாக, எல்லாச் சாதியினர்க்கும் ஏதோ ஒவ்வொரு வகையில் சலுகைகளும் சார்பு களும் காட்டி என்றென்றும் இந்நிலத்தில் சாதிப் பூசல்கள் இருக்கும் படியும், சாதி வேறுபாடுகள் நிலைக்கும் படியும் செய்து வருகிறது. சாதிகளற்ற குமுகாயம் இருக்க வேண்டும் என்பதில் நடுவண ரசுக்குக் கொஞ்சமும் அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு சாதிகள் அழிக்கப்பட்டால் பிராமணியமும் அழிந்து விடும் என்று அவர்கள் அஞ்சுவதாகத் தெரிகிறது. எனவே அவர்கள் மறைமுகமான பிராமணியக் காவலர்களாகவே செயல்படு கிறார்கள். அவ்வாறு அவர்கள் சாதிவேறுபாடற்ற ஒரு குமுகாயத்தை உருவாக்க விரும்பினாலும், பிராமணியத்தை அழித்துக் கொள்ள

அவர்கள் அணியமாயில்லை. பிராமணியந்தான் இவ்விந்திய நாட்டில் என்றென்றும் தலைமையிடத்திலிருந்து செயல்பட வேண்டும் என்று அவர்கள் கருதுவதாகவும் தெரிகிறது. இதை அவர்களின் நடவடிக்கைகள், மத ஏற்பாடுகள், மறைமுகச் சட்ட அமைப்புகள் இவற்றின் வழியாக உறுதிப்படுத்தி வருகிறார்கள், இந்தியாவுக்கு விடுதலை வந்தால் பிராமணியமும் அதன் வேரான வேதமதம் என்னும் இந்து மதமும் அழிந்து போய்விடலாம் என்று அஞ்சியே, 1924-ஆம் ஆண்டில், இந்தியாவுக்கு விடுதலை கொடுக்க வேண்டுமா வேண்டாமா என்று ஆராய்வதற்காகப் பிரிட்டிசுக்காரர் அமைத்த சைமன் குழுவிடம் (Simon Commission), இந்தியாவில் அப்போதிருந்த வேதமதத் தலைவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து, 'இந்தியாவிற்குத் தன்னுரிமை கொடுக்க வேண்டாம்; எப்போதும் போலப் பிரிட்டிசாரே ஆளுதல் வேண்டும்' என்று தம் தூதுவர் வழியாகக் கருத்தறிவித்தனர். இச்செய்தியை இங்குள்ள பலர் மறந்திருக்கலாம். அல்லது இது பலருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

இவ்வாறு, அவ்விடைக் காலத்தில், ஒருவாறு வலுக்குறைந்தும் அஞ்சிக்கொண்டும் கிடந்த வேதமதம் என்னும் அப்பட்டமான ஆரிய—இந்து—மதம், இக்கால் நச்சுப்பாம்பு தலை தூக்குவதுபோல், காஞ்சி காமகோடிகளின் வழியாகத் தலைதூக்கி வருவதற்கு, வடநாட்டு ஆட்சியாளரின் ஒருமித்த பேரணைப்பே காரணியமாக இருக்கமுடியும். அல்லாக்கால், இந்துமதக் கொள்கைப் பரப்புதலுக்கும், அதன் ஆணி வேரான சமசுக்கிருத மொழி வளர்ச்சிக்கும் இப்படி ஓடோடியும்—வரிந்து கட்டிக்கொண்டும் பரிவுரைகளும், பாதுகாப்புகளும், சலுகைகளும் கொடுத்துப் பார்ப்பனப் பாதந்தாங்கிகளாவார்களா?

சமசுக்கிருத மொழிக்குக் கோடிகோடியாக நல்கைகள் ஒதுக்கப் படுகின்றன. சமசுக்கிருதப் புலவர்களுக்கு மாத ஊதியங்கள் வழங்கப் பெறுகின்றன. சமசுக்கிருதப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தென்னாட்டுப் பகுதியில் நிறுவப் பெரு முயற்சி நடந்து வருகிறது. கடந்த சனவரி 1-ஆம் பக்கலில் சென்னையில் நடந்த சமசுக்கிருத சம்மேளனம் அம் மொழிக்கு ஆக்கத்தரும் பல வேண்டுகோள்களை நடுவணரசுக்கு விடுத்துள்ளது. காஞ்சி காமகோடியார், இந்து மதமாகிய வேத மதத்தையும் அதற்கடிப்படையாகவுள்ள வேதங்களைப் பற்றியும் வானளாவும் புளுகுரைகளையும் பொய்யுரைகளையும் ஊர்தோறும் நாள்தோறும் பரப்பி வருகிறார். ''இந்துமதம் என்பது 'அநாதி'. எவ்வாறு நில இயல் வல்லுநர்களாலும், வரலாற்று ஆராய்ச்சியாளர்களாலும் உலகம் தோன்றிய காலத்தையும், மாந்தன் தோன்றிய காலத்தையும் சரியாக உறுதி செய்ய முடியவில்லையோ, அதுபோல் இந்து மதமும்

# மக்களவை

## காஞ்சிப் பெரியவாளுக்குச் சப்பைக்கட்டு!

**ம: 214:** பெருமதிப்பிற்குரிய ஐயா, 20—11—77 'இந்தியன் எக்சுபிரசு' ஞாயிறு சிறப்பிதழில் திரு. ஏ. எசு. இராமன் அவர்கள் 'அருள்மிகு காஞ்சி காமகோடி பீடம் சகத்குரு சங்கராச் சாரிய சுவாமிகள்' அவர்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

அதில் 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அந்நாள் தலைமை அமைச்சர் திருவாட்டி இந்திராகாந்தி அம்மையார் காஞ்சிக்கு வந்து, 'பெரியவாள்' அவர்களைச் சந்தித்தாராம்; அப்போது அவர் அம்மையாரிடம் ஏதும் பேசவில்லையாம்; 92 மணித்துளிகள் காத்திருந்துவிட்டு, இறுதியில் பேசாமலேயே சென்று விட்டாராம்; அதே சமயம் சில நாட்களுக்குப்பின் உருசியாவிலிருந்து வந்திருந்த குழுவினருடன் மூன்று மணிநேரம் உரையாடிக் கொண்டிருந்தாராம்; அம்மையாரிடம் அவர் ஏன் பேசவில்லை என்பதற்கான காரணியம்

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

*அநாதி'யானது. எவ்வாறு மற்ற மதங்களின் தோற்றத்தை நாள், வரையரை செய்து கூறமுடியுமோ, அதுபோல் இம்மதத்தைக் கால வரையரையறை செய்து கூறமுடியாது.'' என்று அறிவியல் பொருத்த மில்லாமல் பேசி வருகிறார். இனி, நாராயண ராமானுச சீயர் என்பவர், சென்னையில், பிப்ரவரி மாதம் நடந்த. "வேதம் வல்லார்கள் பெயரகராதி—மூன்றாவது தொகுதி' வெளியீட்டு விழாவில், 'வேதங் களைப்பாதுகாக்கவும், பயிலவும் பரப்பவும் தென்னாட்டில் 'வேத விசுவ கலாசாலையை' (வேத பல்கலைக்கழகத்தை) தொடங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்விழாவில் அந்நூலை வெளியிட்டுப் பேசிய தமிழக ஆளுநர் திரு. பட்வாரி-பேசுகையில், 'இன்று இந்தியர் களாகிய நாம் உலகில் மதிப்புடன் வாழ்வதற்குக் காரணம், முன் னோர்கள் படைத்த வேதங்களும், வேத வாழ்வுமே காரணமாகு மென்று வேதப் பெருமையைப் பேசியுள்ளார்.*

*இப்படி அரசுச் சார்புள்ளவர்களெல்லாம் வேதங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது, இவ்விந்திய நாடு ஒரு வேதமத நாடு என்னும் கருத்தை உருவாக்குமேயன்றி, இங்குப்பல வகையான மதக் கொள்கைகளும் பண்பாடுகளும் உள்ளவர்கள் வாழ்வதாக வெளி நாட்டில் உள்ளவர்களுக்குத் தெரிவித்ததாகாது. இனி, வேதங்களைப் பற்றி அளவுக்கு மீறிய வகையில் பெருமை பேசப் பெறுகிறது. இந்திராகாந்தி எப்படிப் பொய்யுரைகளைப் பேசியே அரசியல் ஆளுமை பெற முயற்சி செய்தாரோ, செய்கின்றாரோ, அப்படியே ஆராய்ச்சி யறிவற்ற பொய்யுரைகளைப் பேசியே காஞ்சி காமகோடி பீடத் தலைவராகிய சயேந்திர சரசுவதியும் இந்துமத ஆளுமையைப் பெற முயற்சி செய்கிறார்.*

(தொடரும்)

இப்போது இவருக்கு விளங்குகிறதாம்; அஃதாவது அம்மையார் பிறப்பித்த நெருக்கடி நிலைமையை அவர் விரும்பவில்லையாம்; இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதைப்படித்தவுடன் அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை. பெரியவரைப் பெரிதும் மதித்து அம்மையார் பார்க்க வந்திருக்கிறார். இவரின் கடமை என்ன? "குழந்தாய் நீ செல்லும் வழி தவறானது. இதனால் நாட்டிற்கும் உனக்கும் பெரும் தீங்கு விளையும்" என்று எடுத்துக்கூறி நல்வழி காட்டியிருக்கவேண்டும். அவரின் அறவுரைகளைக் கேட்டு அதன்படி அம்மையார் நடந்திருப்பாரா; நடந்திருக்க மாட்டாரா என்பது வேறு செய்தி. ஒருவேளை அதன்படி நடக்கமுன் வந்திருக்கவும் கூடும். அவ்வாறாயின் நம்நாட்டு வரலாற்றில் ஒரு மிகப்பெரிய கறை படிந்திருக்காது. அம்மையார் அருளுரையை மதிக்காவிட்டாலும் கூட கடமையைச் செய்த நிறைவாவது எஞ்சியிருக்கும்.

அந்தச்சமயம் பெரியவர் பேசா நோன்பும் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால்கூட இவ்வரிய சூழ்நிலையில் நோன்பைக் கலைத்துவிட்டுப் பேசியிருக்க வேண்டும். அவர் அப்படி நோன்பு இல்லாதிருந்தும்கூட தம் கடமையிலிருந்து நழுவி விட்டார். ஒருவேளை எங்கே நம்மையும் பிடித்து 'மிசா'வின்கீழ் உள்ளே தள்ளிவிடப் போகிறாரோ' என்று அஞ்சி விட்டாரா? இந்நிலையில் அவர் செயலுக்கு சப்பைக்கட்டுவேறு! வெட்கம்!—தி குமரப்பன். க.இ. மதுரை-2

## தமிழக அரசின் இருமொழிக் கொள்கை என்னாயிற்று?

**ம: 215:** பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு, 'இருமொழிக் கொள்கை'யைப் பின்பற்றும் தமிழக அரசு இருமொழிக்கும் சமமாக தக்க முன்னுரிமை அளிக்கின்றதா என்று பார்க்கில், இல்லை என்பதே உண்மை. வரலாறு, கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்க அந்தந்தப் பாடங்களில் பட்டம் பெற்றவர்களையே உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக அமர்த்தியுள்ளனர். தமிழ்ப்பாடம் கற்பிக்க உயர்நிலைப்பள்ளிகளில் புலவர்கள் அமர்த்தப் பட்டிருப்பது சாலச்சிறந்ததே. ஆனால், ஆங்கிலம் கற்பிக்க ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர்களை உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக இதுவரை அமர்த்தவே இல்லை. இது பெருங்குறை மட்டுமன்று அப்பாடத்திற்கு அளிக்கப்படுகின்ற புறக்கணிப்பும் ஆகும். அத்துடன் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காத குற்றமும் ஆகும். மக்களாட்சி மலர்ச்சி அடைந்துவருகின்ற இந்நாளில் இதுபோன்றவற்றில் மாநில அரசு தக்க கவனம் தக்க காலத்தில் செலுத்த வேண்டும். "இந்தக் கல்வியாண்டில் இருந்து தமிழ்நாட்டில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்க ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர்களையே அப்பாட ஆசிரியர்களாக அமர்த்துவது

என்ற திட்டம் அறிமுகப் படுத்தப்படுகிறது" என்ற செய்தி இந்து தாளில் சென்ற சூன் 6-ஆம் பக்கல் வந்திருந்தும் இதுவரை எம் முயற்சியும் தமிழக அரசு எடுக்காதது வருந்தத் தக்கதே!

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன். வேங்கைவாடி.

## "கைவிடப்பட்ட மனைவிகளும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளும்"

**ம: 216:** தென்மொழி, சுவடி 14 ஓலை 7-இல், பேரா. திரு. இரா. மதிவாணன், க.மு. அவர்கள் எழுதிய மேற்குறிப்பிட்ட கட்டுரையில், "தமிழ் இலக்கியப்பரப்பில் எங்கும் மனைவியை வேண்டு மென்றே கைவிட்டு மீண்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் கணவன்மார் களையும் பெற்ற குழந்தைகளைக் கண்டவிடங்களில் போட்டுவிட்டுப் போய்விடும் பெற்றோரையும் காணவியலாது" என்று கூறியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில், கபிலரகவல், ஞானமிர்தச் செய்யுள் ஆகியவற்றில் காணப்படும் குழந்தைகளைக் கைவிடுங்கதை நிகழ்ச்சி யல்லாமல் வேறு எங்கும் அத்தகைய கொடுமை காணப்படவில்லை என்பது உண்மையே. குழந்தையைக் கைவிடல் வடமொழி இலக்கியங் களில் இயல்பாகக் காணப்படுவதுடன், வடமொழிப் பித்தேறியிருந்த தமிழகத்தில் பிள்ளையைக் கைவிடுவதினும் கொடுமையானதாகிய கறி சமைத்தலும் கதையாகப் பேசப்படுகின்றது. எனினும், சிலப்பதி காரத்தில்,

"சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவியை எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல் ......"

என்று காணப்படுகின்றமையாலும்,

புறநானூற்றில், வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி யாகிய கண்ணகியைக் கைதுறந்தானாக, அவனை அவளுடன் கூட்டு விக்கக் கபிலர் (புறம் 143). பரணர் (புறம் 144, 145) அரிசில் கிழார் (புறம் 146), பெருங்குன்றூர் கிழார் (புறம் 147) ஆகியோர் முயன்றமையும் காணக்கிடக்கின்றது. இவற்றால், அக்காலத்தே இயல்பாக இன்றேனும், அருகியாவது கைவிடப்படும் குழந்தைகளும் மனைவியரும் இருந்தனர் என்பது புலனாமன்றோ? இவை பற்றிப் பேரா. திரு. மதிவாணனார் தமது கருத்தைத் தெளிவாக்குவாரா?

—கு. பூங்காவனம் க.மு: வெங்காலூர்-1.

*(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க.)*

## செய்திகள் திருத்தம்!

சென்ற இதழில் வந்த 14-ஆம் பக்க முதல் செய்தி இறுதிப் பத்தியில் "பாவாணர் தமிழ்க்குடும்ப மகளிரணி சார்பில்... ...அவர் களுக்கு" என்றிருப்பதை "நெய்வேலிக்கிளை உ. த. க. சார்பில், மகளிர் அணி பொது அமைப்பாளர் தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு" என்று திருத்திப் படித்துக் கொள்க.

# உலகியல் நூறு.

- பெருஞ்சித்திரனார் —

[மொழிபெயர்ப்பு; த: முத்துக்குமரன், க. இ.]

## 18. உயிரியல்.

### 1. உந்து நிலை

உய்ப்ப துயிரென்க உந்தல் அதற்கியல்பு
துய்ப்ப ததன்நோக்கம் தோயவே—மெய்ப்பொருந்தி
உற்ற பொருளின் உருப்பெருக்கி ஆங்குகுத்து
மற்றொன் று தாவும் மகிழ்ந்து!

பொழிப்பு: ஒவ்வொரு பொருட்கூறுகளுடனும் பொருந்தி அவற்றை உய்ப்பதால் (இயக்குவதால்) உயிர்க்கூறு ஒவ்வொன்றையும் உயிர் என்று கொள்க. இயங்குதலும் தனக்குற்ற பொருள் களுடன் தங்கி அவற்றை இயக்குதலும் அவ்வொரு கூறுமாகிய உயிர்க்கு இயல்பு ஆகும். அவ்வாறு இயங்கித் தன்னை மேனிலைக்குக் கொண்டு செலுத்துதலே அதன் நோக்கம். அவ்வகையில் ஒரு பொருட்கூறொடு வந்து அளாவி நின்று தனக்கேற்ற உடலுருவாய் அப்பொருட்கூற்றைப் படைத்து, அங்ஙன் தான் பொருந்திய உருவம் போன்ற பல்வேறு உருவங்களைப் பொருள் வடிவாய் தன்கீழ் நிற்கும் உயிர்கள் வந்து தங்குதற்குப் பெருகச்செய்து, தான் பொருந்திய பொருள்கூறு குலைவுற்றநிலையில் ஆங்கணே அதனை உகுத்து நீங்கித் தான் அதனின்று வளர்ந்து விளங்கிய மேனிலைக்கொப்ப மீண்டும் வேறொரு தக்க பொருட் கூற்றுக்குத் தாவி நின்று தொடர்ந்து துய்க்கும். (86)

## 18. ON LIFE

### 1. ON MOVEMENT.

Life feels Movement as natural,
Aim aids to full growth physical;
Of limb as part of life thus aids
One another in jumps it raids. (86)

Consider each part of life that combines with each objective part for its movement and enjoyment as a separate life. Movement is also natural to that part of life. To raise

itself to a higher stage by such moves is its aim. For this, it mixes up with objective part so as to create a boby suitable for it and develops so as to make room for small lives that have taken similar objective bodies to remain under it. When in that stage the bigger life finds its objective boby disturbed, it shakes it off, discards it there and selects another suitable to its developed stage and thus continues to enjoy.

## 2. உகப்பு நிலை

உயிர்க்குகப்பு கூர்தல் உகப்புநிலைக் கங்காந்
துயிர்க்குநிலைக் கொன்றினிணைந் தாரும்-செயிர்க்குநிலை
தோன்றின் துமிக்கும் தொகைக்கூடும் துய்ப்புநினைந்
தான்றலையும் மேலொன்றுக் காங்கு!

பொழிப்பு: உயிர் தனக்குகந்த பொருட்கூறுடன் பொருந்தித் துய்த்து உயர்கின்ற நிலையே அதன் வளர்ச்சி நிலையாம். அத்துய்ப்பு நிலைக்கு அவாவுற்றுத் தன்போலும் அவாநிலை கொண்ட பொருட் கூற்றுடன் கூடிய இன்னோர் உயிர்க்கூற்றுடன் இணைந்து பொருந்தித் தான் மேலோங்குதற்குத் துய்க்கும். அவ்விணைப்பு நிலையின் தனக்குப் பொருந்தாத குறை தோன்றுமாயின் தானுற்ற உயிரிணைப்பைத் துண்டித்துக் கொள்ளும். அவ்வாறு ஒருயிர்க் கூறு தொகை மிகுந்த உயிர்க்கூறுகளோடு பொருந்தித் துய்க்கும். அவ்வகையில் ஓர் உயிரக்கூறு தன்னினும் துய்ப்பின் மிதந்த பிறிதோர் உயிர்க்கூற்றொடு பொருந்துதற்கே எண்ணி என்றும் அவாவி அலைந்து நிற்கும். (87)

## 2. ON GROWTH.

Life's joy is growth; long for it,
Combining with objects like it,
If found wanting, destroy it will;
For pleasure it seeks bigger still. (87)

Combination of life with objects of like nature for enjoyment is the sign of growth. Longing for enjoyment, it seeks combining with objects of like nature and tries to go higher up. In so doing, it severs its connection with objective parts that are found defective in any respect Then it combines

with higher groups for enjoyment. Thus a life always seeks combination with a life that is higher in stage so far as enjoyment goes.

## ௩. துய்ப்பு நிலை

ஒத்தவொன் றி னுள்ளுயிர்த்தே ஓங்குமொன்றால் தாய்வளர்ந்து
மெத்தப் பொருந்துதுணை மேவவே—நித்தலும்
கோடானு கோடிக் கொடிப்பிறக்குந் தாமும்பல்
கோடானு கோடி குவைத்து!

பொழிப்பு: பிறந்து துய்க்க அவாவுதலையுடைய உயிர்கள்' தம் உணர்வு நிலைகளுக்கு ஒருவாறு பொருந்துவனவும், பொருட் கூற்றுடன் முன்னரே பிறந்து இயங்குவனவுமாகிய வேறு உயிர் மெய்களின் வழிப்பிறவியெடுத்து, தம்மினும் பல்வகையான் ஓங்கி நின்ற உயிர்மெய்க் கூறுகளின் புரப்பொடு வளர்தல் பெற்று, தம் நிலைக்கு மெத்தவும் பொருந்தி நிற்கும் உயிர்மெய்க் கூறுகளின் துணையுடன் உலகின்கண் மேவி வளரும் வகையில் நித்தலும் கோடிக் கணக்கான கொடி வழியான் பிறவியெடுப்பதுடன், தாமும் பலகோடிக் கணக்கான கொடிவழித் தொகுதிகளை உண்டாக்கும். (88)

## 3. ON ENJOYMENT

With higher lives to animate
They grow with proper aids to mate;
Daily billows come out in line,
Procreate lives alike and fine (88)

Lives born with a longing for enjoyment combine with other lives of a like nature in stage of growth and feeling around them and try to contact lives in better and higher statges in various ways and grow up with the aid of living parts entirely in agreement with their own stages. In this way billions of lives crop up on the earth's surface to be the source of billions more to come in course of time.

## 4. உய்வு நிலை

உள்ளம் அறிவுணர்வால் உள்விளர்ந்தான் றாங்கடங்கி
வெள்ளப் பிறப்பின் விலகி—கொள்ளலைந்த
பேருளத்தைப் பேரறிவைப் பேரின்பைப் பெற்றார்ந்தே
ஓருளத்தால் கட்டுண்டாங் கோய்ம்!

பொழிப்பு: ஓர் உயிர் உடலொடு பொருந்தித் துய்க்கின்ற பொழுது, அதற்குற்ற அறிவுணர்வு வழி அதன் உள்ள உணர்வு மேலும் மேலும் தூய்மையும் மென்மையுமுற்று விளங்கிக் கிளர்ந்து நின்று அமைவுற்றுத் தெளிந்து, அளவில்லாத பிறவிநிலைகளினின்று விலகித் தான் இறுதியாகக் கொள்ள விரும்பி, முற்பிறவிகள் தோறும் அலைந்த பேருள்ளமும் பேரறிவும் பேரின்பமும் சான்ற மெய்ப் பொருளை அடையப் பெற்றுத் துய்த்து, அதனின் உள்ளத்தொடும் அறிவொடும் தன் உள்ள, அறிவு நிலைகளை இணைத்துக் கொண்டு, அங்ஙனே ஒய்ந்து ஒடுங்கும்.

## 4. ON PRESERVATION.

Heart comes through feeling inner
And contact with lives all the purer
Parts, joins with lives it long'd in all
Previous births to hold for all. (89)

A life, engaged in a physieal body, through contact with the sense organs it is endowed with gets purified all the more and sprouts out clearer and brighter. Getting away from countless lives and seeking one the it finally wishes to take, it grows better in heart, feeling, and bliss in order to attain the supreme-being of these attributes. Finding to be in tune with that being, it unites with it and rests for ever.

## 5 நிலைப்பு நிலை

ஒன்றுநிலைக் கொன்றியுயிர் ஒய்ந்தநிலைக் கொண்பொருளால்
என்றும் பிறத்தல் இலையாகும்—அன்றதுபோல்
முற்பிரிந்த வல்லுயிர்கள் மூள்வரைக்குந் தான்ருமாய்ப்
பிற்பிரிதல் ஊழிக்குப் பின்!

பொழிப்பு: ஓர் உயிர்க்கூறு தான் போய் இறுதியாகப் பொருந்தித் துய்க்க வேண்டிய மெய்ப்பொருள் நிலையோடு பொருந்தி ஒய்ந்த நிலையில், ஒள்ளிய பொருள் கூற்ருேடு இணைந்து மீண்டும் உடலெடுத்துத் துய்ப்புக்காகப் பிறத்தல் அவ்வூழிக்கண் என்றும் இல்லையாகும். இனி. அதுபோலும் முன்னர் அம்மூல மெய்ப்பொருளி னின்று பிரிந்த வலிய உயிர்க்கூறுகள் அனைத்தும் தன்போல் தம் இறுதி நிலைக்கு வந்து கூடுகின்ற வரையில், தான் என்னும் தனிக் கூறு தாமென்னும் ஒரு பெருங்கூருய் ஆகி அவ்வூழியின் எல்லைக்

# செய்திகள்

## 1. தேசியத் தற்பணி மன்றம் (R.S.S) சென்னை கொண்டாடிய பொங்கல் விழா.

கடந்த 14–1–78 அன்று காலை 6 மணியளவில் சென்னை, தேசியத் தற்பணி மன்றம் (R.S.S) கடற்கரையில் பொங்கல் விழா கொண்டாடியது. அம்மன்றத்திற்கே இயல்பான முறையில், உடற்பயிற்சி, கதிரவன் வணக்கம், கூட்டு வழிபாடு ஆகியன நடத்தப் பெற்றன. இந்நிகழ்ச்சிக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமை தாங்கினார். மன்றத்தின் தலைவர். திரு. அரங்கசாமி, பேரா. மா. அண்ணாமலை அவர்கள் தலைவர் அவர்களின் தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் பொங்கல் நாளில் அவர் பணிக்கு வாழ்த்துரைத்தனர். இறுதியில் பெருஞ்சித்திரனார் அவர்கள் பொங்கல் விழா பற்றிய விளக்கவுரை யாற்றியதுடன், தேசியத் தற்பணி மன்றத்தின் கட்டுப்பாடு, தொண்டுணர்ச்சி, பொதுப்பணி ஈகம் ஆகியவற்றை மிகவும் பாராட்டிப் பேசினார்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

காலம் வரை நின்று, அடுத்தத் தோற்றக் காலத்துப் பண்டு போல் மீண்டும் பிரிந்து தொடரும் என்க.

ஊழி—உயிர்க் கூறுகள் உகுக்கப்பெற்று மீண்டும் வந்து பொருந்துகின்ற வரையில் உள்ள காலம்

## 5. ON STABILITY.

Unit'd with that Being as't rests,
Never more shall it know life's pests;
Are lives as one or groups solely,
To meet and part after 'Ooli'. (90)

In that final stage in which it mixes up and rests with that supreme being that it should enjoy, it is never possible in that era for a life to be born again to take a fine material body and enjoy. Similar bodies that have attained that stage previously and are apart from the True-Being, till they reach the final stage and till all smaller lives combine into bigger one continue to the end of that 'ooli' and in the next age of reappearance rhey part to continue again as such.

Note:- 'Ooli' is the period between the disappearance and reappearance with all parts intact.

## 2. சென்னை, ஆவடி, திண்ஊர்தித் தொழிலகக் குடியிருப்பு-முத்தமிழ் மன்றத்தின் பொங்கல் விழா:

கடந்த 14, 15—1—78-ஆம் பக்கல்களில், சென்னை, ஆவடி, திண்ஊர்தித் தொழிலகக் குடியிருப்பு, முத்தமிழ் மன்றத்தின் சார்பாகப் பொங்கல் விழாவும், திருவள்ளுவர் விழாவும் கொண்டாடப்பெற்றன. முதல் நாள் நடந்த பொங்கல் விழாவிற்கு திரு. ச. மாதவன் (தொழிலக முதல்வர்) தலைமை தாங்கினார். தமிழக அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத் தொகுப்பாளர் பன்மொழிப் புலவர். இரா. மதிவாணன். க.மு; அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இரண்டாவது நாள் நடந்த திருவள்ளுவர் விழாவில், தொழிலக ஆய்வுத்துறை முதல்வர் திரு. டி. ஆர். ஆர். இராவ். தலைமை தாங்கினார். பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அதைத்தொடர்ந்து பூர்ணம் விசுவநாதன் குழுவினர் நடித்த 'அண்டர் செக்ரட்டரி' என்னும் தமிழ் நகைச்சுவை நாடகம் நடைபெற்றது.

## 3. திருக்குறள் பெருமாள் அவர்களுக்கு மிதிவண்டி நன்கொடை அளிப்பு விழா-பாகூர். (தெ.ஆ)

கடந்த சுறவம் 3 (16—1—78) அன்று, தென் ஆர்க்காடு மாவட்டம பாகூர் மறைமலையடிகள் இளைஞர் தமிழ் மன்றம், பொங்கல் சிறப்பு விழாவைக் கொண்டாடியது. அன்று காலை 'தமிழ் வளர்கின்றது—தேய்கின்றது' என்னும் தலைப்பில், பேரா. குழந்தைவேலனார் அவர்கள் தலைமையில் பட்டி மன்றம் நடந்தது. மாலையில் நடந்த கருத்தரங்கில் திரு. பரதிநேசன், நாகரிகமும் பண்பாடும் என்ற தலைப்பில் பேசினார். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், மூர்த்திக்குப்பம் திருக்குறள் பெருமாள் அவர்களுக்கு, மன்றத்தின் அன்பளிப்பான புத்தம் புது மிதிவண்டி ஒன்றை வழங்கி, திரு. பெருமாள் அவர்களைப் பாராட்டியும், திருக்குறள் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். பாகூரிலேயே இதுபோன்ற சொற்பொழிவைக் கேளாத மக்களுக்கு இவ்விழா பெரும் வியப்பையும் மகிழ்ச்சியையும் அளித்தது. விழாவிறுதியில் கன்னிய கோவில் தமிழன்பர் திரு. ந. சீனுவாசன் அவர்கள் திருக்குறள் பெருமாள் அவர்களின் அரிய தமிழ்த் தொண்டைப் பாராட்டி உருபா ஐம்பதை அன்பளிப்பாக வழங்கினார், திரு. செயராமன் நன்றியுரையுடன் விழா இனிது முடிந்தது.

## 4. ஈரோடு, பசுமைப் பணி மன்றத்தின் ஆறுவது நிலவுக்கூட்டம்:

ஈரோடு, வேலா பொத்தக நிலைய உரிமையாளர், உயர்திரு. வேலா. இராசமாணிக்கம் அவர்கள் ஏற்பாட்டின் கீழ் இயங்கும், பசுமைப் பணி மன்றத்தின் ஆறுவது நிலவுக்கூட்டம் கடந்த 23-1-78-ஆம் பக்கல் திங்கட்கிழமை இரவு 7-மணியளவில் 3, மண்டப வீதி, அச்சகமேல் திறந்த மாடியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அவ்வூர்த்

தமிழன்பர்களும் பேராசிரியர்களும் பல்துறை அறிஞர்களும் திரளாக வந்திருந்தனர். கூட்டத்திற்குக் கோவை, சேரர் கொற்ற அமைப் பாளர் தென்மொழி மறை நித்தலின்பனார் தலைமை தாங்கினார். சிறப்புச் சொற்பொழிவாளர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், 'நடைமுறை வாழ்க்கைக்குத் தனித்தமிழ் பொருந்துமா?' என்னுந்தலைப்பில் நாலரை மணிநேரம் தொடர்ந்து உரையாற்றினார். கூட்டத்தினர் பனி மிகுந்த அவ்விரவிலும் இரவு 12-30 வரை சிறிதும் நெகிழாமல் சோர்வுறாமல் ஆர்வமுடன் ஆசிரியரவர்களின் அறிவுரையைச் செவி மடுத்து மகிழ்ந்தனர். ஆசிரியர் தந்த புதுமை விளக்கங்களில் மெய்ம்மறந்து சிலர் கண்ணில் நீர் வரக் கசிந்து உளமுருகி எந்தமிழ் மொழியின் ஏற்றத்தையும் மாட்சியையும் உணர்வு பொங்கக் கேட்டனர். தொடக்கத்தில் பாவலர் தமிழ்க்குமரன் அவர்கள், ஆசிரியரவர்களை வரவேற்புப் பாப்பாடி வரவேற்றார். (சில பாடல்கள் அடுத்த இதழில் இடம் பெறும்). அதன்பின் கொம்மக்கோவில் பாவலர் கொ. செ. சின்னப்பா அவர்கள், ஆசிரியர் அவர்களுக்குப் பாராட்டுப் பாடியளித்தார். (பா அடுத்த இதழில் வரும்). அடுத்து, சுவைஞர் சார்பில் கலைக்கல்லூரிப் பேராசிரியர் திரு. ந. ஆறுமுகம். க.மு. அவர்கள், தமிழின் உண்மையான பெருமையை இன்றே உணர்ந்ததாக மகிழ்ந்து நன்றியுரை சாற்றினார். இறுதியில் கல்வெட்டாய்வு அறிஞர், புலவர். செ. இராசு. இலக்.இ. அவர்கள், மன்றச் சார்பில் ஆசிரியவர்களின் அரிய தமிழ்த் தொண்டைப் பாராட்டி கண்ணீர் மல்க, நாத்தழுதழுக்க, நன்றி கூறினார், முடிவில் திரு. வேலா. இராசமாணிக்கம் அவர்கள், இதுவரை நடந்த நிலவுக்கூட்டங்கள் அனைத்திலும் சிறப்பு வாய்ந்தது இக்கூட்டம் என்று பெருமிதத்துடன் வாழ்த்துக் கூறிட, நிகழ்ச்சி இரவு 1-மணியளவில் இனிது முடிந்தது.

## 5. சேவூர் அரசுயர் பள்ளி, இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம்:

கடந்த 28-1-78 அன்று, முற்பகல், அவிநாசி வட்டம், சேவூர் அரசுயர் பள்ளியின் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தென்மொழி மறை நித்தலின்பனார் தலைமை தாங்கினார். முதற்கண் பாவலர் குமர. நடவரச. ஈவப்பனார் அவர்களின் நல்லுரைக்குப்பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'உயர்தனிச் செம்மொழி' என்னுந்தலைப்பில் அரியதோர் உரையாற்றி மாணவர்களிடத்து ஓர் எழுச்சியை உண்டாக்கினார். பள்ளி முதல்வர் திரு. வீ. இரத்தினவேலு க,இ; ப.இ. அவர்கள் வரவேற்புரையும், திரு. பூ. இராமராவ். க.இ; ப.இ அவர்கள் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

## 6. திருப்பூர், பைந்தமிழ்ப் பாசறை, மறைமலையடிகள் மன்றச் சிறப்புக் கூட்டம்:

சென்ற 28-1-78 அன்று மாலை 6-30 மணியளவில், திருப்பூர் பைந்தமிழ்ப் பாசறை, மறைமலையடிகள் மன்றச் சார்பில் சிறப்புக் கூட்டம், காவேரியம்மன் திருமண மண்டபத்தில் நடந்தது. தென்மொழி க. தமிழப்பன், தென்மொழி மா. ஆ. மாசிலாமணி ஆகி

யோரின் முயற்சியால் நடந்த இக்கூட்டத்திற்கு, தென்மொழி ந. முத்துக்குமரன் அறி.இ; ப.இ தலைமை தாங்கி மிகச்சிறப்பான தலைமையுரை யாற்றினர். அடுத்து, மறைமலையடிகளார் படத்தை, திரு. வடிவேலனார், க.மு. அவர்களும், பெரியார் படத்தை திரு. ந. கந்தசாமி க.இ; ச.இ. அவர்களும். பாவேந்தர் படத்தை திரு. கதிரவன் பழனிச்சாமி க.இ; ப.இ. அவர்களும், அண்ணா படத்தை இரா. முருகேசன் அவர்களும் திறந்து வைத்தார்கள். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'மொழி நலம்' என்னுந்தலைப்பில் அரியதொரு சிறப்புரை யாற்றினார்கள். தென்மொழி, மாசிலாமணி அவர்களின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

## 7. மணிராசன்—பானுரேகா திருமணம். பட்டுக் கோட்டை:

சென்ற சுறவம் 16 (29-1-78) காலை 10 மணியளவில், பட்டுக் கோட்டையில் தென்மொழியன்பர் செல்வன் மணிராசனுக்கும், செல்வி பானுரேகாவிற்கும், பாலவரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் தமிழ்த்திருமணம் நடைபெற்றது, புலவர் சுப்பிரமணியம், புலவர். நீ. தங்கவேலனார் அவர்களின் வாழ்த்துரைக்குப்பின் தலைவரவர்களின் சிறப்புரையுடன் நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

## 8. நெய்வேலி உ.த.க. பொங்கல் விழா:

கடந்த 28, 29—1—78 அன்று நெய்வேலி உ,த.க. சார்பில் திருவள்ளுவர் நாள், பொங்கல் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதல் நாள் புலவர். தி. ந. அறிவுஒளி க.மு. அவர்கள் தலைமையில் 'திருக்குறள்' என்னுந்தலைப்பில் பாவரங்கமும், செந்தமிழ் இசைக் குழுவின் சார்பில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றன. இரண்டாம்நாள் மாலைதிரு. சோ. அப்பூதி. பொறி.இ. அவர்கள் தலைமையில் நடந்த பொங்கல் விழாவில், திரு. பொன்வெளிச்சித்தர் 'அருந்தமிழ் மருத்துவம்' என்பது பற்றிப் பேசினர். அடுத்துப் பாவலரேறு பெஞ்சித்திரனார் அவர்கள் பொங்கல் விழா' என்னுந் தலைப்பில் அரியதொரு சிறப்புரையாற்றினார். இறுதியில் உ.த.க. குடும்ப மாணவ மாணவியர் நடித்த ஓரங்க நாடக நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

## 9. சென்னை, பச்சையப்பன் கல்லூரி விடுதி—முத் தமிழ் விழா:

நடந்த சுறவம் 18 (31-1-78) ஆம் நாள் பிற்பகல் 4-மணியளவில் சென்னை, பச்சையப்பன் கல்லூரி விடுதியின் சார்பில் முத்தமிழ் விழா சிறப்புற நடந்தது. விழாவிற்குக் கல்லூரி முதல்வர் பர். திரு: சண்முகநாதன் க.மு. அவர்கள் தலைமை தாங்கினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புரையாற்றினர். திரு. குருவிக்கரம்பை, சண்முகம் தாம் இயற்றிய ஒரு பாடலைப் படித்தார். விழாச் செயலர் நன்றியுரைக்குப்பின் விழா இனிது முடிந்தது.

தொடர்—5

# பாவேந்தர் விழாப் பாட்டரங்கம்

—பெருஞ்சித்திரனார்

பலரறியும் வாய்ப்பொன்றால் ஒருமொழியைப் பிறரும்
படித்தறிய வேண்டுமெனில் அறிவுக்குயர் வெங்கே?
பலரறியும் கீழ்மைக்கும் மேன்மேலும் மேலும்
பல்வகையால் அதிகார வாய்ப்பளிப்ப தென்றால்
சிலரறியும் சிறப்புக்கும் கீழ்மைவா ராதோ?
சிந்தனைக்கும் உயர்வுக்கும் மற்றென்தான் பெருமை?
பலரறிவ தென்றில்லை; உங்கள்கர வெல்லாம்
பைந்தமிழ்க்குச் சிறப்புவரக் கூடாதென் பதுவே! 53

செந்தமிழ்க்கு வாய்ப்பளித்திங் குலகறியச் செய்தால்,
செத்தமொழி வடமொழிக்கும் இந்திக்கும் என்று
சொந்தநலம் ஒன்றிருக்கக் காணார்கள் யாரும்!
சோற்றுநலம் பெரிதென்பார் இங்கிருப்ப தாலே
எத்தமிழைப் பிறரறிய வாய்ப்பின்றிச் செய்தார்!
எதனிலுமே உயர்வுக்கே வாய்ப்பளிக்கும் ஆள்வோர்
செந்தமிழ்க்கு வேண்டாதார்—ஆரியர்என் பதனால்—
சிறுமைக்கே வாய்ப்பளித்துப் பெருமைதனை யழிப்பார்! 54

எட்பெருமை சாற்றிடினும் ஆரியர்க்குச் சிறுமை
இம்மிவரக் கூடாதென் பதுவடவர் கொள்கை!
எப்பொழுதும் வடவோரே தலைமைதாங் குவதால்
எப்பொழுதும் தமிழுக்கே வாய்ப்பளிப்ப தில்லை!
இப்பொருளை—இவ்வுணர்வை—எந்தமிழர் எக்கால்
ஏற்றறிந்து கொள்வாரோ அப்பொழுதே தமிழ்க்கும்
முப்படியும் வாய்ப்புவரும்; இனமும்முன் னேறும்!
முனைவிழந்த பெருமையெலாம் பின்னெழுந்து சேரும்! 55

ஈங்கிதைத்தான் பாவேந்தன் எடுத்துரைக்கக் கேட்டோம்!
ஏற்றமிகு பாக்களினால் மாற்றம்வரக் காணோம்!
ஆங்கதையே பெருமையெனக் கருதிவிட்ட ததனால்
அவன்கருத்தை விட்டுவிட்டே அவன்பெருமை ஆர்ப்போம்!

தூங்குகின்றோம்; தூங்குகின்றோம்; தூங்குகின்றோம் இன்னும்!
தொடையினிலே கயிறுபிறர் திரிக்கத்தூங் குகின்றோம்!
ஏங்கினவன் பாவேந்தன்! எடுத்தெடுத்துச் சொன்னான்!
ஏர்தமிழர் கேளார்கள் எனவறிந்தும் சொன்னான்! 56

மன்றிருந்த தமிழ்வாழ இனம்வாழ, இங்கே
மலிந்திருந்த வளமெல்லாம் என்றென்றும் வாழ,
அன்றிருந்த பெருமையெலாம் நினைவூட்டிச் சொன்னான்;
அணுஅணுவாய் எந்தமிழர் சிதைந்தகதை சொன்னான்!
வென்றிருந்த தமிழ்ஒருகால் வீரம்எனும் கொம்பில்
வீறுபெறும் கொடியாகப் பறந்தகதை சொன்னான்!
இன்றிருக்கும் தமிழனுக்கோ சோற்றுருண்டை மீதில்
இருந்துவரும் ஆசையிலே எதையெண்ணிப் பார்ப்பான்? 57

'செந்தமிழே உள்ளுயிரே நறுந்தேனே என்றன்
செயலெல்லாம் மூச்செல்லாம் உனக்களித்தேன் யானே!
நைந்தாய், நீ எனில்நைந்து போகுமென்றன் வாழ்வே
நன்னிலைஇங் குனக்கென்னில் எனக்கும்அது தானே!"
—செந்தமிழில் இக்கருத்தை அவனெழுத வில்லை!
செங்குருதிச் சேற்றினிலே எலும்பொடித்துத் தோய்த்தே
எந்தமிழர் உணரட்டும் வாழட்டும் என்றே
எழுதிவிட்டுப் போனான்; நாம் புழுதியிலே போட்டோம்! 58

நல்லுயிரும் வல்லுடலும் செந்தமிழும் மூன்றும்
நான்நானென் றூர்த்தெழுந்தான்; வீண்வீணாய்ப் போனான்!
சொல்லிலுயிர் கலந்தெழுதி மூச்சினிலே பாடி
சோர்ந்தவினம் ஆர்ந்தெழவும் பார்த்திருந்தான் காலம்!
'வெல்லுமடா எந்தமிழும்! வெற்றிநிலை வாய்க்கும்;
வீணரல்லர் தமிழர்'என வீறுபெறச் சொன்னான்!
மெல்லமெல்ல நந்தமிழர் அவன்பாடல் கேட்டார்!
வேற்றுமொழிக் காரனுக்கே அதையெடுத்து விற்றார். 59

தமிழையவன் காதலித்தான் அடடா,ஓ அடடா!
தமிழினத்தைக் காதலித்தான் அடடா,ஓ அடடா!
தமிழையவன் தாயென்றான் அடடா,ஓ அடடா!
தமிழினத்தை உயிரென்றான் அடடா,ஓ அடடா!

தமிழையவன் இறையென்றான் அடடா,ஓ அடடா!
தமிழினத்தை உடலென்றான் அடடா,ஓ அடடா!
தமிழையவன் காதலித்தும் தமிழினத்தைப் பார்த்தும்
தமிழாகிப் போனானே அடடா,ஓ அடடா! 60

"கனியிடையில் ஏறிவரும் சுளையினையும் முற்றற்
கழையிடையில் ஊறிவரும் சாற்றினையும் வண்ணப்
பனிமலரில் ஏறிவரும் தேனினையும் காய்ச்சும்
பாகிடையில் ஏறிவரும் சுவையினையும் ஆங்கே
நனிஆக்கள் பொழிதருதீம் பாலினையும் தென்னை
நல்கியதோர் குளிர்மையிள நீரினையும் முற்றும்
இனியன என் பேன் எனினும் எந்தமிழை என்றன்
இன்னுயிர் என் பேன் கண்டீர்" என்றான்பா வேந்தன்! 61

மேலுமவன் செந்தமிழ்மேல் கொண்டிருந்த அன்பால்
மிழற்றுகின்ற செழும்பாடல் அவன்தமிழில் கேட்பீர்!

"அரும்பு தந்த வெண்ணகையே!
அணிதந்த செந்தமிழே, அன்பே!"
"மடுத்துமகிழ் நறுந்தேனே,
வரைந்துமகிழ் ஓவியமே அன்பே!"
"கண்டுவந்த திருவிளக்கே,
களிப்பருளும் செந்தமிழே, அன்பே!"
"உடலியக்கும் நல்லுயிரே,
உயிரியக்கும் நுண்கலையே
கடலியக்கும் சுவைப்பாட்டே
கண்ணான செந்தமிழே அன்பே!"
"ஐயத்திற் கறிவொளியே
ஆடல்தரும் செந்தமிழே அன்பே"—என்று

ஏலும்வகை நூறுமுறை அன்பன்பே என்றே
இன்னுயிரைப் பிழிந்தூற்றித் தமிழ்வடித்த தாரே?
நாலுவகை நூல்களையும் படித்திருப்போம்! "தமிழே
நான்தும்பி! பூக்காடு நீ"யென்றே தாரே?
பாலிடையில் துளிநஞ்சா? பாவேந்தன் பதைத்தான்!
பைந்தமிழில் மொழிக்கலப்பைச் சாடுவதைக் கேட்பீர்! 62

"தாய்ப்பாலில் நஞ்செனவே தமிழில்வட
 மொழி சேர்த்தார் தவிர்தல் வேண்டும்!
தமிழ்ப்புலவர் தனித்தமிழில் நாடகங்கள்
 படக்கதைகள் எழுதல் வேண்டும்!"

"முதல்நூலை அயலான், நஞ்சால்
 முறித்ததும் காணுகின்றேன்"

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு"

"கமழும்உன் தமிழினை உயிரென ஓம்பு;
காணும் பிறமொழிக ளோவெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு;
நம்உரிமை தனைக் கடித்ததப் பாம்பு!"

"தனித்தமிழில் இந்நாட்டுத் தக்கபுதுக்
 காப்பியம்நன் னூல் இயற்ற
நினைப்பாரேல் நம்புலவர்,. நிலவாவோ
 ஆயிரநூல் தமிழகத்தே!"

"அறிவிப்புப் பலகையெலாம் அருந்தமிழ்ச்சொல்
 ஆக்குவதே அன்றி அச்சொல்
குறைவற்ற தொடராகக் குற்றமற்ற
 சொல்லாக அமையுமாயின்
மறுவற்றுத் திகழாளோ செந்தமிழ்த்தாய்?
 தமிழ்மக்கள் மகிழ்ந்தி டாரோ?"

"தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
 தூய்தமிழ் பிதற்றும் என்வாய்!"

தமிழ்வளர்ச்சி பற்றியவன் சாற்றுகின்றான் கேளீர்!
 தமிழல்லால் முன்னேற்றம் சிறிதுமில்லை என்பான்! 63-1

"நமைவளர்ப்பான் நந்தமிழை வளர்ப்பவனும்
 தமிழ்அல்லால் நம்முன்னேற்றம்
அமையாது; சிறிதுமிதில் ஐயமில்லை; ஐயமில்லை
 அறிந்து கொண்டோம்"

"இன்பத்தமிழ் குன்றுமேல்—தமிழ்
நாடெங்கும் இருளாம்!"

"மொழியென்றால் உயிரின் நரம்பு—நம்
முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு"

"தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்
அறிவுயரும் அறமும் ஓங்கும்!
இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்
தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்"

"தாய்மொழி நூற்றுக்கு நூறுபெயர்—பெறத்
தக்கதோர் கட்டாயம் ஆக்கிவிட்டால்
போய்விடும் கல்லாமை"

"செந்நெல் மாற்றிய சோறும்—பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை—கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன்மதுரஞ்செய் கிழங்கு—காணில்
நாவில் இனித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா—உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!"

தமிழ்வளர்ச்சி யாலிந்த வையகமே உயுமாம்!
தண்டமிழ்ப்பா வேந்தனவன் சொல்லுவதைக் கேட்பீர்! 63-2

"வையகவே உய்யுமாறு வாய்த்த தமிழ்
என் அரும் பேறு"

தமிழ்வளர்ச்சித் திட்டமொன்றே அவனின் தமிழ் இயக்கம்'
'தமிழியக்கம்' நூல்போதும் அவன்பெருமை சாற்ற! 63-3

தமிழ்வளர்க்காத் தமிழினமோ தாம்வளர்தல் இல்லை!
தன்மொழி,கா வாதஇனம் வளர்ந்ததுண்டோ உலகில்?

"ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்!"

"உன்தமிழ்த்தாய் இந்நிலத்தில் அடைகின்ற
வெற்றியெலாம் உன்றன் வெற்றி"

"அரசினரின் மொழியாக, அரசியலார் மொழியாக
அரசியல் சார்
வரிசையுறு சட்டமன்றின் மொழியாக, வையம்அறி
மொழியாகத்
திருமலிந்த தமிழ்மொழிதான் ஆகும்வகை நம்புலவர்
சேர்ந்து தொண்டு
புரிகஎன வேண்டுகின்றோம்! பொழிகஎன
பொன் மழை தான்! [வேண்டுகின்றோம்

இறுதியிலே உங்கட்குச் சொல்லுகின்றேன் பெரியீர்!
எந்தமிழத் தாய்மாரே! இளைஞர்களே! தமிழீர்!
உறுதியிலே நமக்குய்தி உண்டென்றால் முதலில்
உய்தியுற வேண்டும்தமிழ்! உலகுணர வேண்டும்!
வெறுமுடலில் ஓடுமுயிரோடுகலந் தோடி
விரிந்துசெலும் நாடிநரம் பெலும்பிலெலாம் தமிழே
மறுவின்றித் திகழ்ந்துணர்வாய்ப் பாய்ந்தோடல் வேண்டும்!
மாபெரிய தமிழினமும் மிகச்செழிக்க வேண்டும்! 64

வரம்பொன்றால் தமிழ்வரம்பு! வாழ்வும்நமக் கதுவே!
வல்லுணர்வால் பாவேந்தன் முழங்குகின்றான் கேளீர்!
"உரம்பெய்த செந்தமிழுக் கொன்றிங்கு தீமை
ஒருநிலையில் நேர்ந்ததென நாமுரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம் உணர்வாய்
நண்ணிடவும் வேண்டும்;செயல் முன்னிடவும் வேண்டும்!"
இரும்பன்றோ நம்தோள்கள்! எழவேண்டும் அன்றோ?
எந்தமிழப் பாவேந்தன் இடிமுழக்கம் கேளீர்! 65

*"ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள் சேர்ப்பாய் [இன்பத்தை*
*ஆக்குவிப்பாய்!*
*ஊழியஞ்செய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்*
*உணர்ச்சி கொண்டே!"*

*"நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!*
*பொன்மொழிக்கு நீபுதுமை ஏற்றுவாய்!*
*மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!*
*செந்தமிழ்ச் சொல்லால் செயலால்*
*தடம்பெருந் தோளால் தொடங்குக பணியை!*

முற்றும்.


# "தமிழ்ச்சிட்டு"

## சென்னை-5.

| | | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | உருபா | 4-00 | 9-00 | 9-00 |
| தனியிதழ் | ,, | 0-35 | 0-75 | 0-75 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஒரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர் எழுதிக்கேட்க!

# பல கணவ மணம்

க. ப. அறவாணன்,
*திராவிடர் மாந்தவியல் பேராசிரியர்,*
*தக்கார் பல்கலைக் கழகம்,*
*தக்கார், செனகால்*

உலகம் இன்று நேற்றுத் தோன்றியது அன்று. பல இலக்கக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. உலக மக்கள் அண்மையில் தோன்றியோர் அல்லர். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றினர். அவர் தோன்றின நாள் தொட்டு, அவருள் இறப்பாரும், புதிதாய்ப் பிறப்பாரும் ஆக மாந்த இனம் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகிறது. இவ்வாறு வாழ்ந்து வருவதற்குக் கரணியம், அன்னோர் இருபாலாரிடையே இருந்துவந்த-இருந்துவரும் உறவே. அவ்வுறவே அக்காலத்து நெறியற்று இருந்த போதும காலப்போக்கில் மாந்தச் சிந்தனை வளர வளர நெறிப்படுவதாயிற்று. அந்நெறிப் படுதலின் நெடுங்கொடு முடியே ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன்; என்ற கோட்பாடாகும். இக்கோட்பாட்டை, இன்றும் பல குழகாயத்தினர் எய்தாதிருக்கத் தமிழர் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே எய்திவிட்டமையைக் கழகக்காலத் தமிழிலக்கியங்கள் சாற்றும். ஆனால் உலகில் இக்கோட்பாடு மட்டுமன்றி வேறு சில இன்றும் வழக்கில் உள்ளன.

11. **ஒருவர்க்கு ஒரே திருமணம்:** ஆடவராயினும், பெண்டிர் ஆயினும் ஒருவரையே மணந்து அவர் இருப்பினும் இறப்பினும், அம் மணவாழ்வோடு தம் வாழ்வை நிறைத்துக் கொள்ளல் அல்லது முடித்துக் கொள்ளல (உடன் உயிர் துறத்தல்) முதலாயின. இது செவ்விய காதல் வாழ்வின் கனிந்த நிலையாகும்.

12. **ஒருவர்க்குப் பல மணம்:** ஆடவன்/பெண் தன் மனைவி/கணவன் இறந்த நிலையில் அலலது அவனை/அவளை விரும்பா நிலையில் முன்னவரை விலக்கிவிட்டு, மறுமணம் செய்து கொள்ளுதல். இஃது ஐரோப்பிய கிறித்தவச் சமய நெறியாக்கப்பட்டுத தற்போது உலகெங்கும் பரவி வருகிறது. இது காதல், உள்ள நிலையினின்று உடல் நிலையை நோக்கி வழுவிவிட்டதைக் காட்டுவதாகும்.

13. **ஒருவர்க்குப் பல மனைவி மணம்:** ஒரே ஆடவன் ஒருத்தியை மணந்துவிட்டு அவளைவிட்டு விட்டோ அல்லது அவளல்லாமல் வேறு பிற பெண்களுடனோ உறவாடுதல். இது தொடக்கத்தில் காமக்கிழத்தி (வைப்பாட்டி) என இருந்தது. பின்னர் பரத்தையர் உறவாக வளர்ந்தது. பின்னர் அவரையும் முறைப்பட மணந்து கொள்ளுதலாக விரிந்தது.

131. ஒருவனுக்கு ஒருத்தி: ஒருத்திக்கு ஒருவன் என்பனவே தமிழர் பண்பாடு.சிற்சில சமையங்களில் ஒருவனுக்கு ஒருத்தி என்பது சிதைந்து ஒரு சிலர் என்ற வாழ்வு சிலருக்கு அமைந்திருந்தது. எனினும் அஃது அறமாகப் போற்றப் படவில்லை. வழுவாகவே பழிக்கப்பட்டது. மனைவி கண்ணகியைப் பிரிந்து மற்றொரு பரத்தையுடன் வாழ்ந்த கோவலனைச் சான்றோர் இடிந்துரைப்பதும், என் மார்பு மாலை என் மனைவி மார்பிலன்றி மாற்றாள்மேல் புரளுவதாக என மன்னர்கள் தமக்குத்தாமே வஞ்சினம் புகலுவதும், கழகக் காலத்திலேயே தமிழரிடம் இருந்த சால்புகள்.

132. ஆனால் கழக இலக்கியங்களில் உள்ள காமக்கிழத்தியர் வரவையும் உறவையும் சிலர் சுட்டுதல் கூடும். வரைவின் மகளிர் வரவும் உறவும் இருந்தன என்பது உண்மையே. ஆனால் அஃது எக்காலத்தும் வரவேற்கத்தக்க வழக்கமாகத் தமிழரிடை இல்லை. பரத்தையர் ஒழுக்கம், மறைந்து அஞ்சி ஒழுகுவதாகவே காட்டப் படும்.

133. அன்றியும் போர்க் குமுகத்தில், ஒருவனுக்குச் சிலர் என்பது தவிர்க்க முடியாததாக இருந்து. கரணியம் போரில் ஆடவர் பலர் மடிவர். பெண்டிரோ களத்திற்குச் செல்லர். எனவே ஆடவர் பெண்டிர் விழுக்காடு சமனாக இல்லை. இதனை ஈடுகட்டவும் பெண்டிர் பலர் மணவினையின்றி மருகுவதைத் தடுக்கவும், போர்க் குமுகத்திற்கு ஏற்பப் புதல்வரைப் பெற்றெடுக்கவும், ஒருவனுக்குச் சிலர் என்ற அமைப்பு பண்டைய குமுகங்களில் தவிர்க்க முடியாத தேவையாக இருந்தது. பெண்டிர் அரும்பெருஞ் செல்வமான குழந்தையை ஈனுநராக இருந்தமையால்தான் அவர்க்கும் போர்க்களம் செல்லும் மரபு உண்டாக்கப்படவில்லை. பொன்போற் புதல்வர்ப் பெறுதவர்க்குப் போரிலிருந்து விலக்கு அளித்தனர். கரணியம் என்ன? அண்மையில் மணம் முடித்த மணமக்கள், அடுத்து அரும்பெரும் குழந்தைகளை ஈனும் தகையர், பொன்போற் புதல்வர் பெறும் நீரியர்; அவரைக் களத்திற்குத் தற்போது விடுத்தல தகாது என்பதனாலேயே அவர் விலக்கப்பட்டனர்.

134 இரு மனைவியரைக் கொள்ளும் வழக்கங்கூட, முதல் மனைவிக்கு மக்கள் இல்லாத சூழலிலேயே எழுந்தது. குழந்தைக்காக மறுமணம் ஒப்புக் கொள்ளப்பட்டது

135. முதல் மனைவிக்குப் பெண் குழந்தையரே இருப்பின் ஆண்-குழந்தை பெறுதற்காக மறுமணம் உண்டாயிற்று. தமிழகம் மட்டுமன்றி, ஆப்பிரிக்க மக்களிடையேயும் இத்தகு வழக்கத்தைக் காணலாம். ஓயாப் போர் மேவிய குமுகத்தில் ஆண் குழந்தையே தலைமை பெற்றிருந்தது. எனவே பெண் குழந்தை பிறப்பதினும்

ஆண் குழந்தை தேவை மிகுதியாகப் பேசப்பட்டது. பேசப்படவே முதல் மனைவிக்குப் பெண் குழந்தையர் இருப்பினும் ஆண் குழந்தைக் காக, மறுமணம் ஒப்புக் கொள்ளப்பட்டது.

136. அரச இனத்தாரிடை பல மனைவியர் மனம் கழக இலக் கியத்தில் இல்லை. பிற்காலத்தில் பல மனைவியரை மணந்து கொள்ளு தலைத் பல்லவர் காலந்தொட்டுப் பார்க்கலாம். இதற்குக் கரணியம், பல நாடுகளைத் தம்மாட்சிக்குக் கீழ்க் கொண்டு வந்த நிலையில் அரசியல் காரணங்களுக்காகப், பல நாட்டு அரச இனப்பெண்டிரை மணந்து கொள்ளல் நேரிட்டது. இஃது அரசியல் அறம்; ஆனால் அக்காலக் குமுக அறம் அன்று.

14. ஒருத்திக்குப் பல கணவ மணம்: ஒரே பெண் ஆடவர் சிலருடன் உறவாடுவது மட்டுமன்று; ஆடவர் பலரை மணந்து கொள்ளுதல். உடன் பிறந்த ஆடவர் அனைவரையும் ஒரே பெண் மணந்து கொள்ளுவாள்; சில சமயம் ஒருவர்க்கு மேலிட்ட உடன் பிறந்தார் அல்லாத ஆடவரையும் மணந்து கொள்வாள். குறிப்பாக, உத்திரப்பிரதேசத்தில் வாழும் பாண்டவ பரம்பரையினர், கணவன்/ர் வீட்டில் இருக்கும்பொழுது மட்டுமே, கணவர்க்குக் கட்டுப் பட்டவர்; தாய் வீட்டிற்கு வந்துவிட்டால் அவர் விடுதலை விலங்கு. அவர் யாருடனும் கூடலாம்; குலவலாம்; உலவலாம்.

ஒருத்திக்குப் பல கணவர் முறை உலகில் சிற்சில இடங்களில் உள்ளது. 88 விழுக்காட்டினர் ஆப்பிரிக்கக் கண்டத்தில், பல மனைவியர் மணமுறையினர், எஞ்சியோரில் ஒரு பகுதியினர் பல கணவ முறையினர். இந்தியாவில் குறிப்பாக, (நீலகிரித்தோதுவர் தவிர) வட இந்தியாவிலும் திபெத்திலும் பல கணவ முறையினர் இன்றும் வாழுகின்றனர், பல கணவ முறைக்கு மேம்போக்காக, பெண்டிர் பற்றுக்குறை காட்டப்படினும் கரணியம் அதுமட்டுமன்று. வேறுசில கரணியங்களும் உள்ளன.

141. சில பழங்குடி மக்களிடத்தில், மாப்பிள்ளை வீட்டார் பெண்ணெடுக்கும் போது, பெண் வீட்டார்க்கு முலைக்கூலியும் பரிசமும் கொடுத்தல் வேண்டும் என்ற வழக்கம் உள்ளது. பெண்ணைப் பெற்றுப் பாலூட்டி வளர்த்தமைக்காகப் பெண்ணைப் பெற்ற தாய்க்கு 'முலைக்கூலி' கொடுத்தல் வேண்டும். இது சில இடங்களில் 'முலைக் கூலி' என்றும் வேறுசில இடங்களில் 'முலைப்பணம்' என்றும் வழங்குகிறது. ஈதன்றிப் பெண்ணைப் பெறுதற்கு மாற்றாக அன் பளிப்புத் தருதல் வேண்டும். இதனைப் பரிசம் (பரிசு + அம்) பரிசப் பணம் ஒன்றும், பரிசப் புடவை, துணிமணி என்றும் வழங்குவர். இவ்வழக்கம் பழங்குடி மக்களிடம் மட்டுமின்றி நாகரிகம் எய்திய திராவிட மக்களிடமும் இன்றும் வழங்குகிறது. சில பழங்குடி

மக்களிடையே பரிசத்தின் மதிப்பு மிகுதியாக உள்ளது. மாப்பிள்ளை மார் பொருளியல் எல்லையை மீறி உள்ளது. அத்தகு சமயங்களில் உடன் பிறந்தார் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து தாம் ஈட்டிய தொகையைப் பரிசப்பொருளாக ஒரு பெண்ணிற்குக் கொடுத்து மணந்து கொள்ளுகின்றனர். திபெத்தை ஒட்டி வாழும் லல்லோங் பழங்குடி மக்களிடம் இவ்வழக்கம் இருத்தற்குப் பொருளியல் நெருக்கடியே தலைமைக் காரணம்.

காட்டெருமைகள், இரண்டு ஆன், ஒரு பன்றி, துணிமணிகள் ஆகியன பொதுவாகப் பரிசப்பொருள். இவற்றை ஒரேயடியாகக் கொடுக்கமுடியாக் 'கல்லோங்' மாப்பிள்ளைமார், தவணை முறையில் பொருள்களைத் தொடர்ந்து கொடுத்து வந்து, எல்லாம் கொடுத்து நிறைவுற்றவுடன் மணம் செய்து கொள்ளுகின்றனர்.

142. உடன் பிறந்தார் இடையே தனித்தனித் திருமணங்கள் நிகழுதலால், பெரும்பாலும் ஒன்றுபட்ட குடும்பம் நாளடைவில் பிரிந்து தனித்தனியாகிறது. இதனால் கூட்டு வலிமை சிதைவுறுகிறது. இதனைத் தடுத்துத் தொடர்ந்து உடன் பிறந்த ஆடவரிடையே ஒற்றுமையை நிலைநிறுத்தத்தான் ஒரே பெண்ணை மணப்பதாகச் சில பழங்குடியினர் கருதுகின்றனர். சான்றாக, அலகாபாத்தை அடுத்துள்ள 'இரவாயி' என்ற பகுதி வாழ் மக்கள் பேரழகினராக இருந்தும், பல கணவ முறையைப் பின்பற்றுதற்கு உடன் பிறந்தார் ஒற்றுமையையே முதன்மைக் காரணமாகக் கூறுகின்றனர்.

143. ஆழ்ந்து பார்ப்பின் மேற்கண்ட கரணியத்தின் உள் கருத்து வேறொன்று என்று தோன்றும், ஒரு குடும்பச்சொத்து வேறு வேறு பெண்களை, உடன் பிறந்தார் மணக்கிறபொழுது சிதைந்து சிறுசிறு கூறாகிவிடும். அது பின்னும் அடுத்த தலைமுறையில் மேலும் சிறுத்து விடும். இவ்வாறு குடும்பச்சொத்து தேய்பிறையாகாமல் ஒரே படி நிற்கப் பல கணவ முறை உதவும். சிற்றப்பாப் பிள்ளை, பெரியப்பாப் பிள்ளை என்ற வேற்றுமையே இங்கு எழாதன்றோ?

144. சில பழங்குடி மக்களிடையே ஆண், பெண் எண்ணிக்கை சமனாக இருப்பதில்லை. பெண்டிர் தொகை பெருக இருந்து ஆடவர் தொகை சிறுக இருக்கிற பொழுது, பல மனைவி மணம் தோற்றும். அதனைப் போல, ஆடவர் தொகை பெருக இருந்து, பெண்டிர்தொகை சிறுக இருக்கிற பொழுது, பல கணவ மணம் தோன்றும். தமிழகத்து நீலகிரிமலையில் வாழும் தோதுவர் இடையே இப்பழக்கம் இருத்தற்குக் கரணியம், பெண்டிர் தொகை குறைவாக இருப்பதே. எனினும் இம்முறை தற்காலிகத் தீர்வே ஒழிய நிலைத்தீர்வு ஆகாது. நிலைத் தீர்வாகக் கொண்டு சில பழங்குடி மக்கள் பல கணவ முறையைப் பின்பற்றுவதால், மேலும் பெண்டிர் எண்ணிக்கை குறைகிறது. எங்ஙனமெனில் பல கணவ மணம் மேற்கொண்ட பெண்டிர் பலரும்- விரைவில் தம் பெண்மையை இழக்கின்றனர். அழகு நோய்க்கு

ஆளாகின்றனர். இதனால் குழந்தை பெறும் தகைமையை விரைவில் இழக்கின்றனர்; சிலர் விரைவில் இறக்கின்றனர். இம்முடிவுகள் தோடுவ மக்களைப் பற்றிய விளத்தங்களாலும் தெரிய வருகின்றன. எனவே பெண்டிர் எண்ணிக்கை குறைவு என்பதால் உண்டான இப் பழக்கம், மேலும் பெண்டிர் எண்ணிக்கையைக் குறைக்கிறதே ஒழியப் பெருக்குவது இல்லை.

2. **தமிழரும் திரௌபதிக் கதையும்:**—திரை மறைவாக ஒருவர்க்குச் சில மனைவியர் கோட்பாடு சிற்சில இடங்களில், சூழல்களில் இருந்தபோதும், ஒரு காலத்தும், ஒரு பெண்ணுக்குச் சில கணவர் அல்லது மறு கணவர் என்ற எண்ணம் தமிழ் மக்களிடை காணப்பட்டதில்லை. ஆனால் மாபாரதக்கதை ஒரு பெண்ணுக்கு ஐந்து கணவர் என்ற அடிப்படையில் எழுந்தது. இக்கதை தமிழகம் எங்கும் பரவியதும், தற்காலத்தில் சிற்றூர் பலவற்றுள்ளும் திரௌபதியம்மன் கோயில் இருப்பதும், அக்கோயில்களிலும ஆண்டு தொறும் விழா நடப்பதும், பாரதம் படிக்கப் பெறுவதும், ஐவருக்குப் பெண்டாட்டி, அழியாத பத்தினி,' 'அண்ணன் பெண்டாட்டி அரைப் பெண்டாட்டி' எனப்பழமொழிகள் வழங்குவதும், வியப்பாக உள்ளன. திராவிட மாந்தவியல் ஆய்வாளர்க்கு இவை விளங்காப் புதிராக உள்ளன. இப்புதிரோடு சேர்ந்த இன்னொரு புதிர். தமிழக எல்லையில் வாழுநரும், திராவிட மொழிபேசுநரும் ஆகிய நீலகிரிவாழ் தோதுவப் பழங்குடி மக்களிடை இன்றும் ஒரு பெண் பல கணவரை மணந்து கொள்ளும் வழக்கம் இருந்து வருவதாம். தோதுவப் பழங்குடி மக்களிடை ஆடவரினும் பெண்டிர் விழுக்காடு மிகக் குறைவாக இருப்பதே கரணியம் என மாந்த இயலார் மொழிகுவர். உலகம் எங்கும் மிக அரிதாக உள்ள இப்பழக்கத்தை உடைய மக்கள் உள்ளனர்.

21. குறிப்பாகத் திராவிடப் பழங்குடியினரான தோதுவரிடை இப்பழக்கம் உள்ளதையும், மாபாரதத் திரௌபதி கதையையும் சேர்த்துக் கருதிய அறிஞர் சிலர், திரௌபதிக்கதை வடபுலத்தே நிகழ்ந்தது போல எழுதப்பட்டிருப்பினும், ஒருத்திக்குப் பல கணவர் என்ற பழக்கம் திராவிடப் பழங்குடி மக்களான தோதுவரிடையிருப்ப தால் பாரதக்கதை திராவிடக் கதை என மொழிந்தனர். இக்கருத்து ஆய்விற்குரியது.

211. தோதுவர் எனும் பழங்குடியினர், தமிழக எல்லை வாழ் மக்கள்; அவர் பேசும் தோடா மொழி-திராவிடம். ஆனால் இவ் விரண்டுமே அவர் தமிழர் அல்லது திராவிடர் என முடிவு செய்யப் போதா. அவரைத் திராவிடர் எனச் சாற்ற அவரது தோற்றமும் இணைத்துணையாக இருத்தல் வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை. திராவிடரைப்போல அவர் கரியர் அல்லர்; திராவிடரைப் போல முக் குடையர் அல்லர்; திராவிடர்தம் முக்கு கூர்த்தது அன்று; தோதுவர்

கூரிய மூக்கினர். எனவே மாந்த உடலியல்படி அவரை முற்றும் திராவிடர் எனத் தீர்மானித்தற்கில்லை.

212. தோதுவரிடை வழங்கும் ஒருத்திப் பல கணவன் என்ற கோட்பாடு மருந்திற்குக் கூடத்தமிழ் மக்களிடை வழங்கவில்லை. கல்வெட்டோ, பிற சான்றுகளோ இல்லை. இலக்கியத்தில் வடபுலக் கதையான பாரதம் தவிர, வேறு எங்கும் இக்கருத்துக் காணப்பெற வில்லை. பிறனில் ஒழுக்கம், வரைவின் மகளிர் போன்ற கூடா ஒழுக்கங்களை எதிர்முகமாகப் பேசும் தமிழ் இலக்கியங்கள் எங்கும், குறிப்பாகக் கூட இக்கோட்பாட்டை உணர்த்தவில்லை. மணவாளன் உயிருடன் இருக்க மறுமணத்திற்குரிய தன்வரன் (சுயம்வர) அறிவிப்புச் செய்த நள தமயந்திக்கதை—தமிழர்க்குரியது அன்று; மணவாளன் இறக்க மற்றவனை நாடிய சூர்ப்பனகைக்கதை தமிழர் கற்பனையன்று; தம்பி மனைவியைத் தமையன் (வாலி) பெண் டாளுவதும் தமையன் மனைவியைத் தம்பி (சுக்ரீவன்) கொண்டாளுவ தும் வடபுலத்து வான்மீகிக் கற்பனைகள்; தமிழர்க்குரியன அல்ல. இவையனைத்தும் தூய தமிழ் இலக்கியங்களில் காணுதவை. சமற் கிருதத்தைத் தழுவி தமிழில் எழுதப்பட்டவை. இவற்றைப் போலவே, திரௌபதி, அருச்சுனன், தருமன், வீமன், நகுலன், சகாதேவன் என்ற ஐந்து உடன் பிறந்தாரை மணந்து கொண்ட கதை தமிழர்க்கோ அல்லது திராவிடர்க்கோ உரியது அன்று.

213. திராவிடப் பகுதியில் இலக்கக்கணக்கான பழங்குடி மக்கள் வாழுகின்றனர். அவருள் தோதுவரைத் தவிர வேறு யாரிடமும் இப்பழக்கம் இருந்தற்கான—இருப்பதற்கான சான்றுகள் இல்லை.

214. மாருக, வட இந்தியப் பகுதியில், ஒரே பெண் பல ஆடவரை மணந்து கொள்ளும் பழக்கம், சில பழங்குடிகளிடம் இருப்பது, மாந்த இயல் ஆய்வால் புலனாகிறது.

214-1 கிளேசியர் என்பது இமயமலை முடிகளில் ஒன்று. அதனை ஒட்டிய பகுதிக்குச் சந்திரதால் என்று பெயர். இது திபெத்திய எல்லை யோரப் பகுதியாகும். இங்கே கத்தீ (Gaddee) என்ற குடியினர் வாழுகின்றனர். புல்வெளிகளில் செம்மறியாடுகளை மேய்ப்பது இவர் தம் பணி. இவரிடம் இருவகைப் பல கணவர் மணம் நடைமுறையில் உள்ளது.

அ. மூத்தவனுக்குப் பிள்ளைப்பேறு இல்லாவிட்டால், இளையவன் அவன் மனைவியிடம் பிள்ளைப் பேற்றைத் தரத் தகுதி உடையவன் ஆகிறான்.

ஆ. இவ்வாறு அன்றி ஒரு பெண்ணே பல கணவரை மணந்து கொள்ள உரிமையுடையவளாக இருக்கிறாள்.

214-2 இந்தியாவின் வடகிழக்குப் பகுதி நேபா ஆகும். நேபாவில் 'கல்லோங்' என்ற பழங்குடிகள் வாழுகின்றனர். சியோங்

பகுதியில் உள்ள யோம்சா, காமலின், கொம்பொங்க்-பக்ரா, பாசர், டாரிங், சென்சி முதலியன இவர்கள் வாழும் சிற்றூர்கள். இவ்வூர்களில் வாழும், இப்பழங்குடி மக்களிடையே பல கணவர் மணம் வழக்கில் உள்ளது. குடும்பத்தின் மூத்த மகன் ஒரு பெண்ணைத் திருமணம் செயதுகொண்டால் அப்பெண்ணே மற்றைய உடன் பிறந்தார்க்கும் மனைவியாவாள். அப்பெண்ணிற்குக் கொடுக்க வேண்டிய பரிசத்தை உடன் பிறந்தார் அனைவரும் சேர்ந்து கொடுப்பர், எனினும் பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தை, முறைப்படி மணம் செய்துகொண்ட மூத்தவனையே சாரும். குடும்பத்தின் பொருளியல் நிலை நன்றாக இருப்பின் மற்ற உடன் பிறந்தாரும் மணம் செய்து கொள்ளலாம். அப்பெண்ணிடமும் மற்ற உடன் பிறந்தார் உறவாட உரிமை உண்டு.

ஒரு பெண்ணின் உரிமைக் கணவன் இறந்துவிடின் கணவனுடன் பிறந்த தம்பியர் அவளுக்குக் கணவனாக இருப்பர். அவள் விரும்பினால் மற்றவர்களையும் திருமணம் செய்து கொளளலாம். ஆனால், அவள் முன்பு பெற்ற பரிசத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டும்.

**214-3.** உத்திரப் பிரதேசத்தில் அலகாபாத்திற்கு அண்மையில் மசூரீ என்ற ஓர் ஊர் அதற்குப் பக்கம் கேம்ப்பீஃபால்சு-அங்கே யமுனா ஆறு ஓடுகிறது. அவ்வாற்றின் இக்கரைக்குப் பெயர் ஜௌன்சார்; அக்கரைக்குப் பெயர் ஜௌன்சார் பாபர்; இவற்றை ஒட்டி 'ரவாயி' என்ற ஊர். இவ்விடங்களில் வாழும் மக்கள், தம்மைப் பாண்டவப் பரம்பரை என்று கூறிக்கொள்கின்றனர்.

**214.31.** பாண்டவர் எங்கள் முன்னோர்; அவர்கள் இங்குதான் தங்கி இருந்தனர். மறை வாழ்வின்போது இப்பகுதிகளில் தான் சுற்றிக் கொண்டிருந்தனர். இங்கிருந்து சிறிது தொலைவில் 'வைராட்' என்ற அகழி உள்ளது, அங்கேதான் விராட நகரத்து வேந்தன் இருந்தான். அதற்குப் பக்கத்தில் 'கோடான்' இருக்கிறது. அவ்விடத்தில்தான் அருச்சுனன் விராட மன்னனின் ஆக்களை மேய்த்து வந்தான். இலாகாமண்டல் என்ற இடத்தில் 'இலாகா கிருகம்' என்ற அரக்கு மாளிகையை இன்றும் காணலாம்.

**214 32** அவர்தம் கூற்றை உறுதிப் படுத்துவன போலச் சுற்றுப்புறம் எங்கும் பாண்டவர்களின் பெயர்களைக் கொண்ட முற்றங்களும், பல மேடைகளும், பல இடங்களும் இன்றும் உள்ளன. பாண்டவரைப் பற்றிய இசைப்பாடல்கள் அம்மக்களிடையே பாடப் படுகின்றன. ரவாயியில் கர்ணன் கோயில் உள்ளது அக்கோயிலில் துரியோதனனின் சிலை ஒன்று கால் முறிந்த நிலையில் காணப் படுகிறது. ரவாயியை அடுத்த 'பதேகர்' என்ற மலைப்பகுதியில் துரியோதனனுக்குத் தனிக்கோயிலே உள்ளது. முறையான வழிபாடு பிறழாமல் நடக்கிறது. இங்கே வாழுநர் துரியோதன வழிபாட்டினர் (தலைமுறையினர்?) பாண்டவரை வெறுத்தும், துரியோதனனை விரும்பியும் பேசுவர்.

21 433 அனைத்திலும் மேலாக,"

"உலகத்தார், வாயால்தான் உண்கின்றனர்;
நீயோ
உன் கண்களால் உண்கிறாய்"

என்ற நாட்டுப் பாடலுக்குரிய இப்பகுதிப் பெண்டிர் பேசும் விழி படைத்த பேரழகினர். இவர் பாண்டவரைப் போலவே, உடன் பிறந்தார் அனைவரையும் மணக்கின்றனர் மூத்த கணவனுக்கும் இளைய (சின்னப்பையன்) கணவனுக்கும் மிகுந்த அகவை வேறுபாடு இருக்கும். இருப்பினும் தோற்றத்தில் தாயும் மகனும் போல இருக்கும். இவர்கள் மனைவி கணவராக வாழ்கின்றனர்.

2144 வட இந்தியா மட்டுமின்றி அதனை ஒட்டிய திபெத்தியப் பகுதியில் உள்ள சில பழங்குடி மக்களிடமும், பல கணவர் மணம் வழக்கத்தில் உள்ளது.

3. ஆக, திராவிடப் பகுதியில் தோதுவ மக்களிடையே மட்டும் காணப்பெறும் பல கணவ மணம், வட இந்திய, திபெத்தியப் பகுதிகளில் பல பழங்குடிகளிடம் இருப்பது மாந்தவியலாய்வால் புலனாகும். அத்துடனன்றி, பாண்டவப் பரம்பரை என்ற ஒன்றே உத்திரப் பிரதேசப் பகுதியில் இன்றும் இருந்து வருகிறது. இவையன்றி மாபாரதக் கதைப் பெயர்களும், கதை நிகழிடங்களும் வடபுலத்தில் நிரம்ப உள்ளன. எனவே பல கணவர் மணம் பழக்கத்தில் உள்ள வடபுல எல்லையிலேயே மாபாரதம் தோன்றினதாகக் கருதல் வேண்டும்.

4. முற்றும் முரண்பட்ட கதை தமிழகத்தில் திராவிடத்தில் எவ்வாறு பரவியது? தமிழகத்தில் பாண்டவரை நினைவுபடுத்தும் ஊர்ப்பெயர்கள், ஆட்பெயர்கள் ஆங்காங்கே இருப்பதுடன் திரௌபதியம்மன் கோயில்களும் சிற்றூர்களில் உள்ளன. கி.பி. 4,5-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு–களப்பிர வீழ்ச்சிக்குப் பின், தமிழகத்தில் ஆரிய அல்லது ஆரியச் சார்புடைய அயலார் ஆட்சி பரவியது. அக்காலத்துப் பக்தி இயக்கம் வெறி கொண்டு பரப்பப்பட்டது. பகுத்தறிவுச் சமயங்கள் வீழ்த்தப்பட்டு, ஆரிய வேதங்களை முதன்மையாகக் கொண்ட வைதிக சமயங்கள் கால் கொண்டன. அப்போதுதான் திரௌபதி கதையும் இன்ன பிற ஆரியக் கதைகளும், தமிழ்நாட்டில் வேர் கொண்டன. குமரிமுனை அம்மன் முதலான தமிழகப் பெயர்களை வடநாட்டில் மருந்துக்குக் கூடக் காண முடியாதபோது, தமிழ் நாட்டில் காசி விசுவநாதன், காசிநாதன், காசிராமன் போன்ற வடபுலத்துப் பெயர்கள் இடந்தோறும் காணப்படுதலை நினைக்க! அயல் நாகரிகத்தின் மேலும், பண்பாட்டின் மேலும் காமம் கொள்ளுதல் தமிழர்தம் இயல்பாதலின், கண்ணகி பிறந்த நாட்டில், கண்ணகி பெயரில் ஓர் அம்மன் பெயர் கூட இல்லாத சூழலில் ஐவருக்கு மனைவியாகிய திரௌபதிக் கதை எடுபட்டது நிலை பெற்றமை வியப்பிற்குரியது அன்று.

## குறிப்புகள்

1. முதல் உலகப்போர். இரண்டாம் உலகப்போர் முடிவின்கண் செருமனி போன்ற நாடுகளில் ஆடவர் பற்றுக்குறை ஏற்பட்டது. ஏற்படவே, வெளிநாடுகளினின்று ஆடவரை அழைத்து ஏற்றுக் கொண்டனர்.

2. பொன்போற் புதல்வரைப் பெறுதவரைத் தீத்திண்டாவாறு கண்ணகி தடுக்கிறாள். உரையாசிரியர், பிள்ளை பெறுத மலட்டுப் பெற்றோர்க்கு விலக்கு அளிக்கப்பட்டதாக உரை எழுதுவர். இவ்வுரை சரியன்று. உலகப்பழங்குடி மக்களின் வாழ்வைக் கற்கும்போது, மணமக்களுக்குப் போரினின்று விலக்களிப்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. விலக்களித்தற்கு இருகாரணங்கள். 1. போர்/பணி செய்ய ஆண்/பெண் குழந்தைகள் மேலும் மேலும் வேண்டும். வேண்டவே குழந்தைகளைப் பெற்றுத்தரும் நிலையிலுள்ள மணமக்களுக்கு வாய்ப் பளித்தல். (2) ஆண் பெண் கூடுதலின் இன்பத்தை இன்னே துய்க்கத் தொடங்கி இருக்கும் மணமக்களைப் போருக்கு இழுத்து மடியச் செய்தலைத் தவிர்த்தல். குறிப்பாக, மறுமணம் இல்லாத தமிழகத்தில் கணவனை இழந்துவிடும் பெண்துயர் பெரிதன்றோ? அது நேரா திருக்கவே பண்டையோர் பெண்டிர்க்கும், மணமக்கட்கும் போர் விலக்கு அளித்தனர்.

3. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை, 'தந்தை மகற் காற்றும்,' 'மகன் தந்தைக்காற்றும்' என்ற திருக்குறளடிகள் (ஆண் மகவை) ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே' எனவரும் புறநானூற்று அடி ஆகியன பண்டைத் தமிழ்க் குமுகத்திலிருந்து ஆண்மகவுப் பேற்றின் சுவையைக் காட்டுவன,

4. இராமாயணக்கதை தென்னிந்தியாவையோ, இலங்கை-யையோ உள்ளடக்கியது அன்று. இராமாயணத்தில் கூறப்பெறும் இலங்கை இற்றை இலங்கை அன்று. அது முற்றும் வடபுலத்து நிலப் புலக்கதை. ஆசிரியர் எழுதிய 'புரட்சிப் பொறிகள்' என்ற நூலைப் பார்க்க. ஆசிரியர் எழுதி 'தென்மொழி'யில் வெளியான 'இராவணன் திராவிடனா?' என்ற கட்டுரை பார்க்க. மத்தியப் பிரதேசத்தில் கோண்டா, பைங்கா, கோர்க்கட என்ற பெயரிய பழங்குடி மக்கள் வாழுகின்றனர். இவர்தம் குலதெய்வம் இராவணனும், கும்பகர்ணனும் ஆவர். அவ்விருவரையே தம் முன்னோர் என்று இப்பழங்குடியினர் நம்புகின்றனர். இராவணனுக்கும், கும்பகருணனுக்கும் கோயில்கள் உள்ளன. 'தசரா' என்ற விழாவை அங்கு நடத்துகின்றனர். இராவணனை மகிழ்விக்க 'அரக்கிப்பூசை' செய்கின்றனர். எருமைகிடா, கோழி, ஆடு, மறி ஆகியவற்றைப் பூசையில் பலியிடுகின்றனர்.

### துணை நூல்கள்

இராகவன். எசு. எசு.- விந்தைப் பழங்குடிகள். குயிலன் பதிப்பகம், சென்னை-17.

சக்திவேல். சு.—இந்தியப் பழங்குடிகள். கலைமகள் காரியாலயம், சென்னை-4.

Thurston—Ethrographical Notes on Southern India.

# மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்.

புலவர். இறைக்குருவனார்.

## சப்பாணிப் பருவம்

31

எங்குநிறை கின்றமை முதலாய [1]வெண்குணத்(து)
இறைவனைத் [2]தன்னியல்பில்
ஏற்றவழி பாடுகொடு சிற்றுயிர்கள் உய்யுமா(று)
இன்மையால் அருளாளனின்
பொங்குநற் [3]பொதுவியல்பு பற்றி,யரு வுருவமாய்ப்
பொலிதலும் அறியாவிருள்
போக்குபே ரொளியுடைமை யன்றியும் பற்றுறும்
பொருளெலாந் தூய்மை செயலும்
செங்கதிர் நீலமென இருவண்ண முடைமையுஞ்
சீர்த்தமுத் தொழில் செய்தலுஞ்
சிருற விளங்குஞ் சிறப்பியல் புடையநற்
செந்தீயில் தென்னாட்டவர்[4]
தங்கள்சிவ பெருமானை நோக்கித் தொழுங்கையால்
சப்பாணி கொட்டியருளே!
[5]தள்ளாத வளவயற் றண்டமிழ்ப் பெருநாட
சப்பாணி கொட்டியருளே!

---

31—1. எண் குணம்: (1) தன்வயத்தனாதல், (2) தூய உடம்பினனாதல், (3) இயற்கையுணர்வினனாதல் (4) முற்றுணர்தல், (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், (6) பேரருளுடைமை, (7) முடிவிலாற்றல் உடைமை, (8) வரம்பிலின்பம் உடைமை.

2,3. தன்னியல்பு—இறைவனின் இருவகை நிலைகளுள் ஒன்று. இது சிறப்பியல்பாம் பிறிது பொதுவியல்பாம். இவை யிற்றை வடநூலார் சொரூபநிலை, தடத்தநிலை என்ப.

4. தென்னாடுடைய சிவன்—திருவாசகம்.

5. 'தள்ளா விலையுள்'-திருக்குறள்.

அடிகளார் செந்தீப் பிழம்பு இறைவன் இயல்புடன் ஒத்துள்ள மையைத் தம் நூல்களின் பலவிடங்களில் விளக்கியுள்ளார்.

## 32

இமிழ்கடல் சூழ்கின்ற பேருலகின் முதலாம்
இருந்தமிழ் வழக்கெல்லையில்
இறைவனைத் திருவிளை யாடல்செய் வித்தவன்
இன்னருட் புனன்முகந்தே
அமிழ்தொழுக் கேய்ப்பமெய் யந்தணர்கள் மன்பதை
யடங்கலும் ஓதியுய்ய
அளித்துதவு கொடையாய நற்பண்[1] சுமந்தன[2]
வருந்திரு முறைப்பாடலைக்
குமிழ்நகை யிலங்கவெழில் அம்பலத் துடையவன்
கூத்தாடு பொலிவு கண்டு
குறைகின்ற நெஞ்சொடு குயிலனைய குரலொடுங்
கொவ்வைவாய் இனிது பாடுந்
தமிழிசைக் கேற்பநற் றுளமிடு செங்கையால்
சப்பாணி கொட்டியருளே!
தள்ளாத வளவயற் றண்டமிழ்ப் பெருநாட
சப்பாணி கொட்டியருளே!

## 33

[1]மூவா யிரந்தமிழ்ப் பாவா யிலங்குபெரு
முன்னுறு தமிழ்த்தோன் றியம்[2]
[3]மூன்றுவ தாம்படிக் கேன்றதிரு முறையென
[4]முனைவரார் தலைமேற்கொளுந்
தேவார்ந்த மந்திரந் தந்தத்திரு மூலனின்
திருமரபில் வருமொருவனும்
தீம்புனற் காவிரியின் ஓங்குகாரை மன்னும்
திருக்கொட்டை யூரின் மேவும்

---

32—1. "பண் சுமந்த"—திருவாசகம்.
2. சுமந்தன—சுமந்தனவாக.

33—1. மூலன் உரைசெய்த மூவாயிரம் பா—திருமந்திரம்.
2. தோன்றியம்—ஆகமம். திருமந்திரம் தமிழாகமம் என்பது வழக்கு. 3. மூன்றும்படி—(1) பற்று (2) தொண்டு (3) ஓகம் (4) அறிவு என்னும் படிநிலைகள் நான்கனுள் மூன்றுவதாகிய ஓகம். இந்நான்கினையும் வட நூலார் (1) சரியை (2) கிரியை (3) யோகம் ஞானம் என்ப.
4. முனைவர்-வினையின் நீங்கி விளங்கிய அறிவினர்.

மாவோகி யாயவர சானந்த முனிவனின்
மணிமலர்த் தாள் பணிந்து
மற்றவன் தந்தருள் மந்திரம் பெற்றொளிர்
மாசிலாக் குருமாமணி
தாவாப் பெரும்புகழ் நிலைகொண்ட தலைமகன்
சப்பாணி கொட்டியருளே!
தள்ளாத வளவயற் றண்டமிழ்ப் பெருநாட
சப்பாணி கொட்டியருளே!

34

நான்மறைகள் என்றே பழந்தமிழ் நூல்கள் தாம்
நவிலுவ பெரும்பான்மையும்
நல்லதமிழ் நூல்களே யல்லாது பின்னாள்
நடப்பித்த வடமொழியினில்
மேன்மை யிலாச் சிறிய தெய்வங்கள் தம்மையும்
வெறியாட்டு வேள்விதமையும்
மிக்கபூ தங்கள்குடி[1] விடியல்[2]பிற வற்றையும்
மெத்திவழி பாடு செய்யும்
பான்மையின் இருக்குமுதல் நான்மறைகள் அலவெனப்
பாங்குற எடுத்துரைப்போய்[3]
பழந்தமி ழிலக்கியப் பயிற்சியிற் றமிழர்தம்
படிநிலை வளர்ச்சிகண்டு
சான்றவ னெனக்கேட் டுவந்ததாய் ஆயினோய்[4]
சப்பாணி கொட்டியருளே!
தள்ளாத வளவயற் றண்டமிழ்ப் பெருநாட
சப்பாணி கொட்டியருளே!

35

கம்பனின் மகனாய் அம்பிகா பதிபெருங்
காவலன் பெற்ற மகளாங்
கன்னியம ராவதிக் கதைகள்வர லாறெலாங்
கண்டுமிக நுணுகியாய்ந்து

5. திருமூலரின குருமரபில் வந்தவர் திருக்கொட்டையூர் அரசானந்த முனிவர்.

34—1. குடி-சோமப் பூண்டின் சாறு.
2. விடியல்-வைகறை உருவகம் (உஷா)—இவை தெய்வமாக வழுத்தப்பட்டுள்ளன.
3. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை எனும் அடிகளார் நூலின் முன்னுரை காண்க!
4. "ஈன்ற பொழுதில்"-திருக்குறள்.

செம்புலப் பெயலென்ன ஆங்கவர்கள் தாங்கொண்ட
சீரார்ந்த காதல்நிலேயும்¹
சீர்த்தநற் பழகுதமிழ் வளமையும் மற்றுநின்
செம்மைமிகு புலமைநலமும்
எம்பால் விளங்கிமிகு பேருவகை செய்யஉயர்
இனியமுத் தமிழ்சிறக்க
எழிலார்ந்த நாடகஞ் செய்தருள் மாவயவ
எங்கணும் பசுமைபூத்துச்
சம்பா² வளங்கெழுமு பொன்னிசூழ் நன்னுட
சப்பாணி கொட்டியருளே!
தள்ளாத வளவயற் றண்டமிழ்ப் பெருநாட
சப்பாணி கொட்டியருளே!

35—1. "செம்புலப் பெயல்நீர் போல"-குறுந்தொகை. 2. சம்பா—நெற்பயிர்—நிலத்துக்கணியென்ப நெல்லுங் கரும்பும். o

## 'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956. 19 ஈ (ஆ) வகுப்பு 8-ஆம் கட்டளேப்படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம்: | சென்னே-5. |
| 2. | காலமுறை: | திங்கள் ஒருமுறை. |
| 3. | அச்சிடுவோர் பெயர்: | மா. தாமரை. |
| | இனம்: | தமிழர். |
| | முகவரி: | தென்மொழி அச்சகம், சென்னே-5. |
| 4. | வெளியிடுவோர் பெயர்: | திரு. பெருஞ்சித்திரன். |
| | இனம்: | தமிழர். |
| | முகவரி: | தென்மொழி அச்சகம், சென்னே-5. |
| 5. | ஆசிரியர் பெயர், முகவரி: | திரு. பெருஞ்சித்திரன், சென்னே-5 |
| 6. | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும். | திரு. பெருஞ்சித்திரன், சென்னே-5. |

பெருஞ்சித்திரனுகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—1978
சென்னே-5.

—பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

# தனிம வரிசை

இல. க. இரத்தினவேல், அறி. மு.
பூதவியல் துறை, மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை-20.

## 12. வெய்யம் (BISMUTH) Bi $^{209}_{83}$

'வானத்தில் எத்தனை கோள்கள் உள்ளனவோ, அத்தனை மாழைகள் தான் உலகில் உள்ளன' என்று பழங்கால இயைபியலர் ஆன இதளியர்கள் (Alchemists) கருதினர். ஞாயிறு என்ற சூரியன்-தங்கம; திங்கள் என்ற மதி-வெள்ளி; செவ்வாய்-இரும்பு; அறிவன் (புதன்)-இதரம்; வியாழன்-வெளியம்; வெள்ளிக்கோள்-செம்பு; காரிக் கோள் (சனி)-ஈயம் இதற்குமேல் இரண்டு மாழைகள் உள்ளன என்றால் மேலும் இரண்டு வானக்கோள்கள் இருந்தால்தான் இயலும். இல்லை யெனில் இதற்குமேல் மாழைகள் இருக்கவே வழியில்லை என அவர்கள் நம்பினர். எனவே இதற்குமேல் தெரியவரும் புது மாழைகளை இந்த ஏழு அடிப்படை மாழைகளின் வேறுபட்ட வடிவம் எனக்கருதினர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், வெண்ணிறம் பொருந்திய ஈயம் போன்ற ஒரு தனிம மாழையைக் கண்டும் கூட, அதனைத் தனி மாழையாகக் கருதாமல் ஈயத்தின் வேறு வடிவமாக, "சாம்பல்நிற ஈயம்" (Plumbum Cinereum) என்று சார்சு அஃறிகோலா (Giorgius Agricola) அழைத்தார்.

மேலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் தனி மாழைகளை அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதற்கான வழிதான் என்ன? முள்ளை முள்ளால் தானே எடுக்க வேண்டும். பின்னர் வந்த ஓர் அறிஞர் கூறினர்: கலீலியோ கலீலி என்னும் பேரறிஞர் ஒருவர் தாமே கண்டுபிடித்த அரிய தொலைநோக்குக் கருவியால், தொடர்ந்து வானக் கோள்களை ஆராய்ந்து வருகிறார். அவர் ஆராய்ந்து அறிந்தபடி நமது "9 கோள்"களைவிட மேலும் சில கோள்கள் வானில் உலவு கின்றனவாம். நமது ஞாலக்கோளுக்கு ஒரு நிலா உள்ளதைப்போல, வியாழக்கோளுக்குப் பல நிலாக்கள் இருப்பதாகத் தெரிவிக்கிறார். இவ்வாறே மாழைகளும் வானக்கோள்களைப் போலவே மேலும் இருந் தாகவேண்டும் அல்லவா! எனவே தான் புதிய மாழைகள் உள்ளன என்பதை நாம் ஒப்புக்கொண்டே யாகவேண்டும்."—இந்தக் கூற்று விரும்பிய பயனை விளைவித்தது,

இதனால் தான் அஃறிகோலா இந்தப்புதிய தனிம மாழையைக் கண்டபின், "பிசுமூத்தம் (Bismutum) என்று நான் குறிப்பிட்டது, வெள்ளியம் எனிலோ வெள்ளியம் அன்று; காரீயம் எனிலோ காரீயமும் அன்று; இவ்விரண்டிலும் வேறுபட்ட மூன்றும் பொருளான இது சாம்பல்நிற ஈயம் ஆகும். இது மற்றவற்றில் இருந்து முற்றிலும் 'வேறுபட்ட தனிம மாழை" என எடுத்துரைத்தார்.

பெயரீடு: வெண்ணிறத்தைச் சுட்டும் ஒரு வேர்ச்சொல் 'வெள்'. வெள்–வெய். இது செர்மானிய மொழியில் Weiss என வழங்கும். (தொண்டி, முசிறி என்பவற்றுடன் 'சகரம்' சேர்த்து Tundis, Muziris என மேலை நாட்டார் வழங்குவதற்கு ஒப்ப இதுவும்) ''வெய்சு''–''வீய்சு'' என்று ஆகியிருக்கலாம். 'Muth' என்பது செர்மானிய மொழியில் 'பொருள்' என்பதைக் குறிக்கும். எனவே 'வெண்பொருள்'–ஆன மாழையை Weissmuth என்று அழைத்தனர். அதுவே Bismuth ஆயிற்று. 'வ'-வும் 'ப'-வும் தமக்குள் மாறிக் கொள்ளும். (எ-டு) விறை-freeze, விட்டில்-Beetle; வெட்டம்-Photos.

Weissmuth என்ற முதற்சொல்லில் இருந்து உருவான Bismuth-ஐ நாம் வெய்யம் (அல்லது, வெளியம்) என்று அழைக்கலாம். செவ்வெண்மை நிற மாழை என்று பொருளில் இது தமிழில் 'வாலரம்' என்றும் முன்னர்க் குறிக்கப்பட்டது. 'வால்' என்றால் வெண்மை. (ஒ.நோ; 'ஊர்தியும் வால்வெள்ளேறே!') 'அர்' என்றால் சிவப்பு 'அம்' என்பது மாழையைக் குறிக்கின்ற பெருமைப் பொருட் பின்னொட்டு (Angmentative suffix) வாலரம் என்ற புதுப்புணைவைவிட வெய்யம் என்ற வேர்ச்சொல் மூலத்தை உகந்து மேற்கொள்ளலாம்.

வரலாறு: வெய்யம் மிகுதியாகக் கிடைக்காவிடினும் கூட, பேசில் வாலண்டின் இதனைப்பற்றி எழுதத் தவறவில்லை. வெய்யத்தின் தனிம நிலையை முதன் முதல் உணர்ந்து தெளிந்து எழுதியவர் வாலண்டின் என்றே கருதலாம். அன்றிமுனியைப் பற்றி எழுதி வெளியிட்ட அதே 1450-ஆம் ஆண்டில் வெய்யத்தைப் பற்றியும் விளம்பியுள்ளார்.

வெய்யம் எளிதில் மூறியக் கூடியதால் அக்காலத்தில் இதனை அரைகுறை மாழையாகவே கருதினர். 1739-இல் போட் (J H. Pott) என்பவர் வெய்யத்தின் பண்புகளை ஆராய்ந்து காட்டினர். 1753-இல் சியோபிரே (S. F. Geoffrey), 1780-இல் பெர்ஃமான் (T. Bergmann) என்பவர்கள் இதன் வினைப்பாடு பற்றி ஆராய்ந்தனர்.

வெய்யத்தின் 'விளை நிலம்'. வெய்யத் தாதுக்கள் சேஃசானி, பொகீமியா, பிரித்தானியத் தீவுகள் முதலானவற்றில் முன்னுளில் கிடைத்தன. வெய்யம் பெரும்பாலும் 'வெய்ய சல்பைடு' (Bismuth Sulfide) ஆகவே கிடைக்கிறது. இது செப்பு, ஈயததாதுக்களிலும் காணக்கிடக்கிறது. இக்காலத்தில் வெய்யம் மிகுதியாகக் கிடைக்கும் நாடுகள் ஆவன: கொரியா, சீனு, பொலிவியா, அர்சண்டின.

வெய்யத்தின் பண்புகள்: உறையும்போது விரிவடையும் மிகச்சில தனிமங்களில் வெய்யமும் ஒன்று. இவ்விரிவு 3·32% (நூற்றுமேனி) எல்லா மாழைகளையும்விட மிகுந்த குறுக்குக் காந்தப பண்பு (Diamagnetic Property) கொண்டது. இதன் மின்தடை, அழுத்தம் அதிகமானல் அதிகரிக்கும்; இழுவிசை (Tension) அதிகமானல் குறையும். இதன் வெப்பக்கடத்தம் (Thermal Conductivity), இதள் (Mercury) ஒன்றைத் தவிர்த்த ஏனைய எல்லா மாழைகளையும்

விட மிகவும் குறைந்தது. இதன் படிகம், அறுகோணப் படிக அமைப்பில் சாய்சதுர வகையினது.

வெய்யத்தின் அலைநிறப்பதிவு (Spectro Graphic)ப் பணிகளுக்கு 306·7716 மற்றும் 289·7975 நேனோ மீட்டர் (Nanometre) அலைவரிகள் கைக் கொள்ளப் பெறுகின்றன.

**வெய்யக் கலப்பு மாழைகள் :** வெய்யக் கலப்பு மாழைகள் கணக்கில் அடங்கா. உட்பரிமானங்கள் மிகத்துல்லியமாக அமைய வேண்டிய மின்னுருப் பொருள்களை வெய்யக்கலப்பு மாழைகளாலேயே உருவாக்க இயலும். நெளிவு சுழிவான தெளிவான துல்லியமான இரும்பு வார்ப்புகளுக்கும், அரிப்பு அல்லது தோய்வுரு உருக்கு மற்றும் மதியத்திருத்திகளின் (Selenium Rectifiers) மின்வாய் (Electrode) களிலும் அந்தந்த மாழைகளுடன் சிறிதளவு வெய்யம் கலக்கப்பெறும்

வளிநிலைச் சமனுக்கம் (Airconditining) மற்றும் குளிர்ப்பாக்க (Refrigeration) அமைப்புகளில் மண்ணியம்–வெய்யம்–அன்றிமனி (TeBiSb)க் கலப்பு மாழை பயன்பெறுகிறது. இம்மாழை, சூரிய ஆற்றலை நேரடியாக மின்சார ஆற்றலாக மாற்றும் பணியையும் புரிகிறது.

**காந்தப்பண்பு:** நிலைத்த காந்தங்களை உருவாக்க மாங்கனிய–வெய்ய (MnBi)க் கலப்பு மாழை பயன்படும். இக்கலப்பு மாழை, வேறு எந்தச்சிறந்த காந்த மாழையையும்விட பத்து மடங்கு அளவில் காந்த நீக்கத்தை (Demagnetisation) எதிர்த்து நிற்கவல்லது. இந்தப் பண்புடைமையால், புறக்காந்தப் புலங்களால் இந்தக் காந்தங்கள் பாதிக்கப்படுவதில்லை; எனவே இவை மின்சாரமானிகளில் மிகவும் பயன்பெறுகினறன.

**அணு உலையுள்:** அணு அற்றலை உண்டாக்க உதவும் ‘உரேனியம்’ என்ற மாழை நீரவெய்யத்தில் (liquid Bi) கரையும். எனவே ‘நீரமாழை அணுஉலை’யில் ‘உரேனியத்தின் ($U^{235}$) ‘ஊர்தி’ யாகவும்; உலையின் குளிர்ப்பான் ஆகவும் வெயயம் பயன்பெறுகிறது.

**கூடிகைகளின் மருத்துவப் பயன்:** ‘வெய்ய கார்பனேட்’ ($Bi\ H_2CO_3$) ஓர் எளிய புளிய நீக்கி (Antacid ; செரிமானக் கோளாறு (Dyspepsia) மற்றும் குடற்புண் முதலிய நோய்களை நீக்க உதவும். மற்றும் உணவுச்குழாயின் வரம்பை அறிய, புதிர்க்கதிர் ஆய்வுகளில் பளிர்வுப் பொருளாகப் பயன்படும்.

‘வெய்ய சாலிசிலேட்’ ($Bi\ C_6H_4CO\ OH$) வயிறு, மற்றும் குடல் அழற்சிக்கான மருந்தாகும. ‘வெய்ய உவர்ம டார்ட்ரேட்’ ஒரு வகை மூட்டழற்சி நோயில் ஊசி மருந்தாகச் சிலகால் உதவுகிறது.

‘வெய்ய சப்கல்லேட் (Bi Subgallate) என்ற கரையாத மஞ்சள் நிறப்பொடி படை முதலில் தோல் நோய்களில் பயன்பெறுகிறது.

**குறியீடு:** வெளியத்தைக் குறிக்கும் டியூட்டானியச் சொல்லுக்கான வரியனில் முதல் இரு எழுத்துகள் (Bi) இதன் குறியீடாக அமையும்.




அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ ஆங்குசிலர்
மெச்சி யுரைப்பதனுல் மேலாமோ—மூச்சின்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு.

(நூல் நிறைக்கு வந்துள்ள நூல்கள் சில. இவற்றுள் சில அடுத்துவரும் இதழ்களில் நூல்நிறை செய்யப்பெறும்).

1) **மனமாற்றம்:** (வரலாற்று நாடகம்.)
ஆசிரியர். **தமிழ்க்குடிமகன்.** க.மு. விலை: 3 உருபா.
வெளியீடு: அறிவொளி பதிப்பகம். 338. வடக்கு மாடவீதிமதுரை-1.

2) **கவிதைக் கனிகள்:** (பாடல் தொகுப்பு.)
ஆசிரியர். **தமிழ்க்குடிமகன்.** க.மு. விலை: 3 உருபா.
வெளியீடு. அறிவொளி பதிப்பகம். 338. வடக்கு மாசி வீதி மதுரை-1.

3) **சீர்திருத்த செம்மல், மலையாள மாகவிஞர் குமாரன் ஆசான்** (வரலாற்று நூல்)
ஆசிரியர். கு. வெ. கிருட்டிணசாமி. க.மு; ச.இ.
விலை: 7-50 உருபா.
வெளியீடு. பூங்குன்றன் பதிப்பகம்.
6. திருவேங்கடம் தெரு. வடகோவை. கோவை-641002.

4) **ஒரு அரும்பு மலர்கிறது.** (புதினம்)
ஆசிரியர். இரா. வடிவேலன். க.மு.
வெளியீடு. தேவி நிலையம் இராயப்பேட்டை. சென்னை-14.

5) **மனித வரலாற்றில் மூன்று இலட்சம் ஆண்டுகள்.**
விலை. 2-40.

6) **பழங்களின் ஆராய்ச்சி.** விலை குறிக்கப் பெறவில்லை.
ஆசிரியர். மருத்துவர். எச். செல்வராசு.
கிடைக்குமிடம். மே/பா. தென்மொழி மறை நித்தலின்பனர்.
39. 11-ஆம் தெரு. தாடாபாது. கோவை-12.

7) **அன்பு பாட்டு.**

8) **அறிவுப் பாட்டு.**

9) **அழகுப் பாட்டு.**

(குழந்தைப்பாடல் நூல்கள்)
(விலைகள் குறிக்கப் பெறவில்லை)

ஆசிரியர்: பாப்பாவின் பாவலர், முரசு நெடுமாறன்.
வெளியீடு: மலேசியாப் புத்தகாலயம்.
278-B, பத்து, 2½ சாலான் ஈப்போ, கோலாலம்பூர்.

# புதுச்சேரியில் விளம்பரப் பலகைகள் தூய தமிழில் மாறுகின்றன!

புதுவைத் தனித்தமிழ்க் கழகச் செயலாளர் தென்மொழி. க. தமிழமல்லன் அவர்களும், தமிழ் இலக்கிய இயக்கங்களின் கூட்டமைப்பான தமிழ் காவற்குழு உறுப்பினர்களும் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் வேண்டுகோளையும் ஏற்று, புதுவை வாணிக நிலையங்கள் பல தம் விளம்பரப் பலகைகளைத் தூய தமிழில் மாற்றியுள்ளன. அந்நிலையங்களின் பெயர்கள் வருமாறு:

அண்ணா சாலை:

1) மாறன் மின் அணுவியல்.
2) 'மனோரஞ்சன் சங்குலி-மகன்கள், தனியார் (அளவறை)
3) 'கீதா' மின் அணுவியல்.
4) கேரளா தேநீர் விடுதி.
5) 'செண்டிரல்' தேநீர் இல்லம்.
6) சங்கர் பால் நிலையம்.
7) காரைக்கால் புதிய உணவு விடுதி, புலால் உணவகம்.
8) 'சக்தி' எண்ணெய் ஆலை.
9) 'மாடர்ன்' முடிதிருத்தகம்.

நேரு சாலை:

1) கொலம்பியா இல்லம்.
2) இசை அகம்.
3) திரு. அம்பாள் மளிகை, நாட்டு மருந்து வணிகம்.
4) புதுமை உலர் வெளுப்பகம்.
5) 'இரா. கோவிந்தராசு' மணிப்பொறி பழுது பார்க்குமிடம்.
6) தூய மேரி தட்டெழுத்துப் பயிற்சி நிலையம்.

காந்தி சாலை

1) கலை தையலகம்.
2) திரு சோதி பண்டகம்.
3) தேவி உலர் வெளுப்பாளர்.
4) சீகோ நிலையம்.
5) சங்கர் தைப்பலகம்.
6) சரசுவதி கடை.

மற்றும் 'புருசோத்தமன் எழுதுபொருள் காகித விற்பனையாளர்.
சான் குழுமம்.
கே. எம். பட்டேல்.
ராதா இல்லம்.

தூய தமிழ் விளம்பரங்களை மேற்கொண்ட அந்நிறுவன உரிமையாளர்களைத் தென்மொழி மனமாரப் பாராட்டுவதுடன் தமிழுரிமை காத்த அன்னார் நன்னெஞ்சங்களையும் வாழ்கவென வாழ்த்துகிறது.

# தமிழ்த்தாய் வாழ்த்து.

## புலவர். பொன். முகிலன்.

(நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா)

—தரவு—

உலகினிலே தமிழொன்றே உலவியதோர் பழங்காலம்
நிலவுலகில் பலமொழிகள் பிறக்காத நெடுங்காலம்
மக்களெல்லாம் மொழிவதற்கும் மதிப்படைந்து சிறப்பதற்கும்
தக்கபடி உதவியதால் தமிழ் அமிழ்தை மொழியென்னும்
பெயராலே அழைத்ததுடன் பெருமைபல இணைக்கையிலே
மயக்கமுறு கடல்பொங்கி மடித்ததனுல் பலதிசைக்கும்
பிரிந்துசென்றோர் படைத்தபல மொழிகளிங்கே பிறந்ததன்பின்
அறிவார்ந்த தமிழ்என்னும் அரும்பெயரை அடைந்தவளே!

—தாழிசை—

1. கடலடியில் அமிழ்ந்திருக்கும் கொடியநிலை நிகழ்ந்தாலும்
உடலெடுத்தே முதன்முதலில் உயிர்களிங்கே வளர்ந்தோங்க
இடமளித்த குமரிநில எழிற்பரப்பில் பிறந்தவளே!
தடமின்றி அழிந்தவைபோல் அழியாயெம் தமிழணங்கே!

2. உலகிருளை விலக்குதற்காய் உயர்ந்தெழுஞ்செங் கதிரவன்
நலமழிக்கும் அகவிருளை நயமுடனே ஒழிப்பவளே! [போல்
வழுமனத்தார் பகைகொண்டுன் வளமையினை மறைத்தாலும்
எழுஞாயிற் றெழில்ஒளியாய் இலங்குகின்ற தமிழணங்கே!

3. மூவாத இளமையுடன் முதன்மொழியாய்ப் பிறந்தவளே!
பாவாத கொடுமொழிகள் பகைத்துன்னைச் சிதைத்தழிக்க
1மாவாக முயன்றாலும் மறைமலையார் தனித்திறனுல்
பூவாக மலர்ந்தொளிரும் பொலிவுமிக்க தமிழணங்கே!

—தமிழ்ச்சொல்—

எனவாங்கு

—சுரிதகம்—

மூவியல் பகுப்பினை முறையாய்ப் பெற்றும்
பாவியல் சுவடிகள் பயனுற அடைந்தும்
எண்ணெழுத் தியம்பும் ஏடுகள் தந்தும்
நுண்கலை மொழியும் நூல்களைப் படைத்தும்
அகம்புறம் எனும்பெரும் அறிவினைக் கொடுத்தும்
புகழின் மீமிசை பொருந்திய தமிழே!
நலிவிலாப் புதுக்கலை நயமுடன்,
பொலிவுறும் பழம்புகழ் புதுக்கல்எம் பணியே!

---

1. மாவாக—விலங்காக.

(8-ஆம் பக்க தொடர்ச்சி)

## இந்திமொழி, பிரிவினையை உண்டாக்கும்!

ம: 217: பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம். இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று ஒருபக்கம் உறுதிமொழிகள் அள்ளி வீசப்படுகின்றன. இந்தி திணிக்கப்பட்டால எதிர்த்துப் போராடி உயிர்விடுவோம் என்ற முழக்கங்கள் ஒருபக்கம் எழுப்பப்படுகின்றன இத்திரைகளின் மறைவில் இந்தி வேகமாகத் திணிக்கப்பட்டு வருகிறது.

1947- ஆம்ஆண்டுக்கு முன்பு இந்தியா என்ற ஒரு தனிநாடு இருந்தது கிடையாது. பலவித உருட்டலுக்கும் மிரட்டலுக்கும், உறுதிமொழிகளுக்கும் பின் ஒனறிணைக்கப்பட்டு உருவான நாடு தான் இந்தியா. இந்த அடிப்படையில் இந்த நாட்டின் எந்த ஒரு பகுதியில் பேசப்படுகின்ற மொழியும இந்த நாட்டின் தேசிய மொழியாக ஆக்கப்பட்டால் அஃது அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களுக்கே பெரும் நன்மை பயப்பதாக அமையும். இப்போது அதனால்தான் குறைந்த கல்வித்தகுதி கொண்ட இந்தி மொழிக்காரர்கள் எளிதில் தேர்வுகள் எழுதித் தேர்வு பெற்று வேலை வாய்ப்புகளும் பதவி உயர்வுகளும் பெறமுடிகிறது என்பதை நடுவண் அரசுத் துறையில் பணியாற்றுபவர்கள் தெளிவாக அறிவார்கள். இந்நிலை இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களின் முன்னேற்றத்திற்கு மாபெரும் தடையாக அமைவதோடு இந்திக்காரர்களுக்குத் தனி சலுகையாகவும் ஆகிறது.

நடுவண் அரசுத்துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அந்தந்தக் கோட்ட, மாநில உயர் அதிகாரிகளிடமிருந்தும், குறிப்பிட்ட அமைச்சகங்களிலிருந்தும் இந்தி மொழியைக் கட்டாயம் படித்தாக வேண்டும் என்று மிரட்டப்படும் பாணியில் சுற்றறிக்கைகள் விடப்பெறுவதும், இந்தி தெரியாதவர்களின் எண்ணிக்கை அடிக்கடி கணக்கெடுக்கப்படுவதும் முறைகேடான செயல்களாகும்.

இந்தியா சட்டப்படி எப்படி ஒரு மத, இனச்சார்பற்ற நாடோ அதேபோல் ஒரு குறிப்பிட்ட, இந்நாட்டின் மொழிச் சார்பற்ற நாடாகவும் இருக்கவேண்டும். அதுவரை இந்த நாட்டில் ஒற்றுமை நிலவாது என்பதோடு இந்தியாவை உண்மையிலேயே மக்களாட்சி மெய்ம்மத்தை ஏற்றுக் கொண்ட மாந்த உரிமைகளில் தலையிடாத நாடாகவும் ஏற்றுக் கொள்ள இயலாது.

ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலத்திலுள்ள நடுவண் அரசு அலுவலகங்கள், நிறுவனங்களில் அந்தந்த மாநில மொழியும், தொடர்பு மொழியாக ஆங்கிலமுமே பயன்படுத்தப் பெறுதல் வேண்டும். குறிப்பாக அஞ்சல் துறை போன்ற அலுவலகங்களில்

இதை உடனடியாகச் செய்ய வேண்டும். தாய்மொழியில் மட்டுமே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களே மிகுதியாக உள்ள இந்த நாட்டில் மக்கள் தங்கள் பணிகளுக்காக அரசு அலுவலகங்களுக்குச் செல்கையில், அங்கு அனைத்துப் படிவங்களும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே இருப்பது அவர்களுக்குப் பெருத்த இடையூருக அமைந்துள்ளதோடு, நேர்மையாக அவர்களுக்கு வழங்கபபட வேண்டிய உரிமைகளை மறுத்துள்ள செயலுமாகும். தமிழீழம், சிறிலங்கா நாடுகளில் இருப்பதுபோல் தாய்மொழியில் தொலைவரி கொடுக்கவும் ஏந்துகள் உடனடியாகச் செய்யப்பெறுதல் வேண்டும். அறிவியல் வள்மை பெற்றதும், அனைத்துலகத் தொடர்பு மொழியாக உள்ளதும், இந்தியைக் காட்டிலும் முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர்களுக்கும் மற்ற இந்திய மொழியினருக்கும் தொடர்புடையதும், வழக்கில் மிகுந்துள்ளதும், இந்திய நாட்டு எம்மொழியினருக்கு ஒரு தலைப்பக்கமாக பயன்தராததுமான ஆங்கிலமே இந்த நாட்டின் தொடர்பு மொழியாக என்றென்றும் நீடிக்க வேண்டும்.

பெரும்பான்மை மக்களின் மொழி என்று காரணம் காட்டி இந்தியை இந்த நாட்டின் தேசிய மொழியாக்குவது முட்டாள் தனமாகும். அதனல் இந்த நாட்டில் இணைந்து வாழும் தமிழர் போன்ற சிறுபான்மை மொழி, இனத்தவர்க்குக் கேடு விளையும் என்பதால் யாம் இணைப்பை துண்டித்து கொண்டு வாழ வேண்டிவரும். எனவே இந்திக்காரர்கள், நடுவண் அரசுக்காரர்கள் தேவையற்ற இந்தி மூலம் பிரிவினைக்கு வித்திடாதீர்கள் என்று எச்சரிக்க விரும்புகிருேம். எமது மொழியையும், பண்பாட்டையும் காப்பதற்கு அணியமாக உள்ள தென்மொழி இயக்கம் ஒரு தற்கொலைப்படை என்பதையும் இந்திக்காரர்கள் உணர்ந்து கொள்வது நன்மை பயக்கும்.

—நலங்கிள்ளி, சித்த(நாயக்க)ன் பாளையம், கோவை:

---

*(44-ஆம் பக்கத் தொடர்ச்சி)*

போன்றதே இந்தித்திணிப்பு என்பது. அரசுச் சலுகை, அதிகாரச் சலுகை, பணச்சலுகை மூன்றையும் காட்டி என்றென்றும் மறைமுகமான வடவரின் வல்லாண்மையரசுக்கு வழியமைத்துக் கொடுப்பதே இந்திமொழிப் பரப்புதலின் உண்மையான நோக்கம். அது திணிப்பாக இருந்தால் என்ன? இனிப்பாக இருந்தால் என்ன?—இந்திமொழியை இரும்புக் கொழுக்கட்டையாகச் செய்து இங்குள்ளவர்களின் வாயில் கொண்டுவந்து திணித்தால்தான் இந்தித்திணிப்பு என்பதன்று! சலுகை காட்டிப் படிக்கச் சொல்வதே திணிப்புத்தான்! இரண்டுக்கும் தமிழ்நாட்டில் இடங் கொடுக்கக் கூடாது என்பதே நம்முடைய கருத்து. முதல்வர் ம. கோ. இரா. இதில் 'நரியுருவந் தாங்கி 'நடிக்க' வேண்டாம். ம. பொ. சி., மூப்பன் போன்றவர் களுக்கே கைவந்த 'பழக்கம்' அது!

சுடச்சுட வரும்

# பச்சை அரசியல் பக்கம் இது!

''அரசியல் வல்லூறு''

## (அரசியல் அழற்சி உள்ளவர்கள் இப்பக்கத்தைப் படிக்க வேண்டாம்!)

### இப்படிப் பேசுவது மொரார்சிக்குப் பெருமையில்லை.

'கடந்த 30 ஆண்டுகளாகப் பேராய (காங்கிரசு)க் கட்சி தவறான வழியில் நாட்டில் ஆட்சி நடததிவிட்டது' என்று தலைமையமைச்சர் மொரார்சி தேசாய் கௌகாத்தியில் மக்களிடம் பேசி, அதனால் மககள் (சனதா)க் கட்சிக்கு ஒப்போலை கேட்கிறார். இஃது என்ன வேடிக்கை யாக இருக்கிறது! சென்ற 29 ஆண்டுகளாக அப்பேராயக்கட்சி செய்த பிழைகளுக்கு இவருந்தாமே முழுப்பொறுப்பாக இருந்திருக்க முடியும். நேற்று முளைத்த மக்கள் (சனதா) கட்சியில் இவர் உறுப்பினர் என்பதாலேயே இவரும் இவர் நண்பர் தலைவர்களும் இப்படியும் பேசி மக்களை ஏமாற்றப் புறப்பட்டிருக்கிறார்களே! இவர்களுக்கு மனச் சான்று என்று ஒன்று இருக்காதா? அல்லது வெட்கம் இருக்காதா?

### இந்திராகாந்தி சஞ்சய்காந்திக்குத் தாயில்லை; சாணக்கியனுக்குத் தாய்!

''தன்னை இழிவுபடுத்திப் பணிய வைக்க வேண்டும் என்பதைத் தவிர மக்கள் (சனதா) கட்சிக்குத் திட்டவட்டமான வேலைத்திட்டம் எதுவும் இல்லை'' என்று இந்திராகாந்தி குண்டூரில் நடந்த தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார். இந்திராகாந்தி அரசியல் புரட்டிலும் தந்திரத்திலும் சாணககியனையும் மிஞ்சிவிட்டார் என்ப தற்கு இப்பேச்சை விட வேறு சான்று தேவையில்லை. ஓர் அரசை இழிவு படுத்தும் நோக்கத்துடன் தனி ஒருவரின் தன்னலப் பேச்சு இப்படித்தான் இருக்க முடியும். மக்கள் இந்த 'அம்மையாரின்' பேச்சை மிக மிக விழிப்பாக இருந்து படித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர் அரசியல், விளங்கும். பேச்சு முழுவதும் 'அரசியல் புரட்டுக்கு இலக்கணங்கள்!

### 'இந்தித் திணிப்பு' என்பது எப்படியிருக்கும்—ஓர் எடுத்துக்காட்டு!

''இந்தி மட்டுமன்று; எந்த மொழியையும் திணிக்க இசைவளிக்க மாட்டோம் என்று தலைமையமைச்சரும் உள்துறை அமைச்சரும் உறுதி கூறி வருவதை நிறைவேற்றுவார்கள்'' என்று தமிழக முதல்வர் ம. கோ. இரா. தமிழரசுக் கழக 32—ஆம் ஆண்டு விழாவில் கட்டியங்கூறிப் பேசியுள்ளார்; அது சரி, முதலில் 'இந்தித் திணிப்பு' என்பது எப்படியிருக்கும், 'திணிப்பில்லாத இந்தி' என்பது எப்படியிருக்கும் என்று முதல்வர் விளங்கிக்கொண்டாரா? 'பணம் கொடுத்து விலைமகளைக் கூடச் செய்வது'

(தொடர்ச்சி முன்பக்கம் பார்க்க)

சென்ருல் இலங்கையில் நடந்ததுபோல் நம்மோடு எண்ணிக்கையில் மிஞ்சியவர்களால் மட்டுமில்லை எண்ணிக்கையில் குறைந்தவர்களாலும் நாம் அறிவுறுவோம். எனவே பிறரையும் மயக்கத்திலுறுத்த வேண்டாமென்று இறைஞ்சுகிறேன். அரசியலாலரின் போலி உணர்வு பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். அஃது ஒன்றும் புதுவதன்று தூலியசு சீசர் நாடகத்தில் அவர் கொலையுண்ட அன்று அந்தோணி நடத்திய கமுக்கக் கூட்டத்தில் இதனைச் சேக்சுபியர் நன்கு விளக்கியுள்ளார். எனவே மக்களுக்குச் செயல்முறைக் கல்வியும், அரசியல் நேரடிப் பங்கேற்பும் ஏற்பட்டால் இவ்வேமாற்றுக்கு அணைகட்ட முடியும்.

தமிழ்நாட்டு அரசியல் குறித்து—இருதலைவர்களையும் குறித்து—தமிழன்பர் ஒருவரிடமிருந்து இன்று நான் பெற்ற மடலில் குறிப்பிட்டிருந்ததைத் தருகிறேன். ''வடவனுக்கு யார் சிறந்த அடிமை என்ற போட்டிக்களமாகத் தமிழகம் நிற்கிறது,'' பொருத்தமான கூற்று, எனவே இரு போலித் தலைவர்களில் எவர்பின் சென்ருலும் தமிழர்க்கு விடிவில்லை. எனவே இரு கும்பல்களிலிருந்தும் விலகி மயக்கத்திலமிழ்ந்திருக்கும் உணர்வுமிக்கோரை நெறிப்படுத்தி விடுதலை நோக்கி உண்மையான வழியில் அழைத்துச் செல்ல அடிபணிந்து வேண்டுகிறேன், அன்புடனும் புணிவுடனும், —கரிகாலன். பெரியகுளம்.

0:568: உயர்திரு ஆசிரியர் அவர்களுக்கு பல்லடம் சீவாதாசன் எழுதும் மடல். வணக்கம், தங்களின் 'தென்மொழி' இதழைப்பற்றி பல்லடம் முத்துக்குமரன் அவர்கள் என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிருர். இதற்கு முன்னரே உங்கள் இதழைப் பார்த்திருக்கிறேன். ஆனுல் படித்ததில்லை, படிக்காமலேயே தங்கள் கருத்து இக்காலக் குமுகாயத்துக்கு ஒவ்வாது எனக்கருதி வந்தேன், அதை இப்போது மறு ஆய்வு செய்து கொண்டிருக்கின்றேன். தங்கள் சொற்பொழிவைத் திருப்பூர் நகரில் கேட்டேன். தெளிவு பெற்றேன். தமிழ் வெறி, தமிழ்ப் பற்று-இவற்றிற்குப் புதியபொருள் தெரிந்தேன். வழிஎப்படியாயினும் தமிழர் நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையையே தவமாக வாழ்ந்து வருகிறீர்களே, அதற்கு என் பணிவான நன்றிகள்! 'தென்மொழி' இதழ்கள் பல படித்தேன். என் நிலை, என் கடமை புரிந்தது. ''ஐயை'' படித்துக் கொண்டிருக்கின்றேன். இனித் தொடர்ந்து தென்மொழியின் உறுப்பினராக முடிவு செய்துள்ளேன். தங்கள் பணி சிறக்க இவ் விளைஞனின் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

—சீவாதாசன். பல்லடம்.

0:569, தனித்தமிழ்க் காவலர் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கட்கு வணக்கம்! பிண்டாரிகள் என்ற கொடிய கொள்ளைக் கூட்டத்தின் தலைவனும், முன்னுள் நெருக்கடிக்கால ஆளுநருமான மோகன்லால் சுகாதியாவின் கைஏவலாளான...த்தின் இல்லம் எனது நண்பரின் நண்பர் இல்லத்திற்கருகில் உள்ளது. நாடளுமன்றத் தேர்தலின் போது அவரிடத்தில் கமுக்கமாக ஓரிடத்தில் உரையாடும் போது ''கடந்த காலத்தில் பார்ப்பனக் குமுகாயத்தை இராமசாமி (நாய்க்கரும்), அண்ணுத்துரையும் சேர்ந்து அடியோடு ஒழித்தார்கள். குறைந்த பக்கம் இருபது ஆண்டுகளுக்குத் தமிழ், தமிழர் என்று பேசாத அளவிற்குச் செய்து முடித்துவிட்டேன்'' என்று மிகப் பேருவகையுடன் கூறினுராம். இந்திரா வல்லரக்கியின் கட்டளையின் பேரில் இருட்டடிப்புச் செய்து முடித்துள்ளார்கள். உடம்பில் ஓடுவது தமிழ் அரத்தம் என்று அனைவரும் சற்று எண்ணுவார்களேயானுல் அன்றுதான் நம்மிடையே ஒற்றுமை வளர்ச்சிபெறத்தொடங்கும். இந்த அறிவியல் உலகில் இன்னும் அடிமையாக வாழ்வது சரி இல்லை. தட்டி எழுப்புங்கள் உறைவாளை; பகையை வெட்டி வீழ்த்திடுவோம்!

—மு. செகந்நாதன். கல்கத்தா-53.

0:570. தென்மொழியின் நலனில் அக்கறையுடன் சில கருத்துக்களைக் கூறுகின்றேன். தள்ளுவதும் கொள்ளுவதும் தங்கள் பொறுப்பு. தென்மொழியில் வரும் பல பகுதிகளும் கருத்துக்கு

விருந்தாகவும் உணர்ச்சியூட்டுவனவாகவும் இருக்கின்றன. கூறப்போனால் தென்மொழி படிக்கத் தொடங்கிய பிறகுதான் சிறிதாக இருந்த தமிழார்வம் சிறந்த முறையில் வளர்ந்திருக்கிறது. தென்மொழியில் 'நூறாசிரியம்' என்ற சிறந்த பகுதி வராமல் இருப்பது பெருங்குறையாக உள்ளது. மாழைகளைப் பற்றிவரும் அறிவியல் தொடர் சிறப்பாக இருக்கிறது. பாவேந்தர் பாட்டரங்கம் பகுதியும் ஆசிரியவுரையும் பாராட்டும் படியாகயுள்ளன. ஆனால் 'திருவள்ளுவர் யார்?' என்ற தொடர் அறிவுக்குப் பொருத்தமில்லாத தொல்கதையைப் போன்றிருக்கிறது. அப்பகுதி திருவள்ளுவருக்குப் பெருமை சேர்ப்பதாகவும் தெரியவில்லை. இதற்குச் செலவிடும் பக்கங்களை இன்னும் சிறந்த பொருட்களைப்பற்றி எழுதப் பயன்படுத்தலாம் என்று நினைக்கின்றேன். —ச. உலகநாதன். ஈரோடு.

0:571: தமிழகத்தின் தலைசிறந்த அறிஞரும், தன்னேரில்லாத் தண்டமிழ்ப் பாவலருமாகிய ஐயா அவர்கட்குத் தனித்தமிழ் மாணவன் எழுதும் இனிய மடல். வணக்கம், ஐயா; யான் இழையறாத தென்மொழி அன்பன். ஆயினும் தடைகள் பல வாழ்க்கைச் செலவில் வந்தவண்ணமாகவே குறுக்கிடுவதால், ஆங்காங்குச் சோர்ந்துநின்று உங்கள்பின் ஓடிவர முயல்கின்றேன். எந்தையும், என் அண்ணன் பிள்ளைகள் இரண்டும் பப்பத்து நாட்கள் இடைவெளியிலேயே இயற்கை எய்தினார்கள். பிள்ளைகள் இரண்டுள் 5 அகவை உடைய பையன் ஒருவனாவான். குமரிச்செல்வன் எனத்தாங்கள்தான் பெயர் சூட்டினீர்கள். எம்வினை எம்மை விழ்த்தியது; பாசம் நிறைந்த என் வாழ்க்கையில் இந்நிகழ்வுகள் சோர்வை மிகுவித்து விட்டன. நிற்க, யான் கடந்த ஆண்டு முதுகலைத்(தமிழ்த்)தேர்வில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவனாகத் தேர்வு பெற்று இக்கால் ஆராய்ச்சி மாணவனாகச் சேர்ந்துள்ளேன். கடந்த ஆண்டு அண்ணாமலையில் தனித்தமிழியக்கம் தொடங்குமாறு மடல் மூலம் அறிவித்தீர்கள், கைம்மைப் பார்ப்பனத்தியின் கடுமை நீங்கிய இது காலை தனித்தமிழ் இயக்கம் தொடங்கியுள்ளோம். ஆர்வமுள்ள மாணவர்களால் அரியேறியக்கமாகச் செயல்படுகின்றது. கடைப்பலகைகளைத் தனித்தமிழாக்கும் வகையில் முயன்று வெற்றி கண்டு கொண்டிருக்கின்றோம். தாங்கள் இவண் பல்கலைக் கழகத்திற்குவந்து ஒரு செந்தமிழ்ப் பொழிவு நிகழ்த்திச் செல்லுமாறு மாணவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். இப்படிக்கு அன்புள்ள தமிழ்மாணவன்

—கு. இராசேந்திரன், க.மு. அண்ணாமலை நகர்,

0:572: பைந்தமிழ்ப் பாவல வணக்கம் பல. நீரும் உம் இல்லம் உறுப்பினர்களும், மொழியின் வாழ்வுக்காக உங்கள் வாழ்வை அரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து துன்புற்றுக் கொண்டிருக்கின்ற உணர்ச்சியுள்ள தமிழர்களில் நானும் ஒருவன். தமிழர் இனம், தமிழ்மொழி நலம் ஆகியவற்றிற்காக வாழ்ந்து கொண்டிருக்கின்றபர். கலைஞரை "கருணாநிதி தமிழனல்லன், அவர் பரம்பரையார் குச்சிப்பிடி நடனம் ஆடியவர்கள். எனவே அவர் ஆந்திராவிலிருந்து வந்தவர் எனக்கூறியவர் இம்மண்ணின் முதல்வர். இந்நிகழ்ச்சி குறித்து தாங்கள் 'தென்மொழி'யில் என்ன எழுதியிருந்தீர்கள் என அறித்திட இயலவில்லை. இதற்கிடையில் உம் வாழ்வை (சிறை வாழ்வை) தெரிந்து துயரமுற்றேன். உம் புலமை இம்மண்ணில் விலை போகாது. "புரட்சிப்பாவலர் பாரதியாருக்கு ஏற்பட்ட நிலை உனக்கும் வந்து விடக் கூடாதே" என ஒவ்வொரு நொடியும் நினைப்பவன், இதழை எல்லோரும் படித்துப் புரிந்திடும் வண்ணம் இனிய தமிழில் வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன். —க. இராசா. இராமதேவநல்லூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).